மலர்-5 இதழ்-113 மே 1-15 2021 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

e- magazine

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இ-மெயிலில் வெளிவரும் இதழ்




மாதமிருமுறை

ஆங்கிலேயரை அசரவைத்த வெட்டவெளி சிவன்

## நான்கு வழி சாலையை மாற்றி அமைக்க வைத்த முனிஸ்வரர்



# மகாலட்சுமி கடாட்சம் கிடைக்க

வீட்டு வாசலில் கோலம் போடும்போது இந்த வரிகளை சொல்லிக் கொண்டு கோலம் போட்டால் மகாலட்சுமி கடாட்சம் வீட்டில் குடியேறும்.

கங்கை நீரே...
கோதாவரியே....
கொளப்படி சாணமே,
அள்ளி தெளிக்கின்றேன்.
ஐஸ்வர்யம் பெருக வேண்டும்.
கரைத்து தெளிக்கின்றேன்.
கைலாசம் சேரவேண்டும்.
இருளோடு போ மூதேவி!
பொருளோடு வா சீதேவி!!

www.aanmeegamalar.com

# ஆக்ஸிஜன் பிரச்சனையை தீர்க்கும் இயற்கை செயல்முறை



தற்போது ஆக்ஸிஜன் தட்டுபாடு அதிகரித்து வரும் நிலையில், இயற்கை முறையில் ஆக்ஸிஜனை சுவாசிக்கும் எளிய முறைகள் பல உள்ளன, இதில் குறிப்பாக லடாக் போன்ற பணி பிரதேசங்களில் சுற்றுலா பயணிகளுக்கு ஆக்ஸிஜன் பிரச்சனை ஏற்படாமல் இருக்க ஒரு சிறிய துணிப்பையில், சில மூலிகைகளை கட்டி பயணிகளுக்கு கொடுப்பார்கள்.

திடீரென பயணிகளுக்குஆக்சிஜன் பிரச்சனை ஏற்பட்டால் இந்த பொட்டலத்தை முகர்ந்து பார்த்தால் ஆக்ஸிஜன் குறை பாடு நீங்கும். அதன்படி இந்த பொட்டலத்தில் உள்ள மூலிகைகளை பார்ப்போம்.

லவங்கம், ஓமம், கற்பூரம் மற்றும் யூக்கலிப்டஸ் எண்ணெய் சில துளிகள் சேர்த்துக் கட்டப் படும். இதை முகர்ந்து வந்தால் ஆக்ஸிஜன் அளவு சீராக இருக்க உதவும். இதை இந்த பேரிடர் நேரங்களில் நமக்கும் உதவியாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

# பல்வேறு பிரச்சனைகளை தீர்க்கும் குஞ்சிதபாத தரிசனம்

சிதம்பரத்தில் நடராஜப் பெருமான், தனது இடது பாதத்தை வளைந்து தூக்கித்திருநடனம் ஆடியதற்குக் குஞ்சிதபாதம் என்று பெயர். இந்த தரிசனத்தைக் கண்டாலே தீராத வியாதியும் நீங்கும். பல மூலிகைகளால் செய் யப்பட்டஒரு பொருளை நடராஜரின் தூக்கிய திருவடியில் அணிவிக்கப்படும்போது, அந்த மூலிகைவேர்களுக்குக் குஞ்சிதபாதம் என்றும் பெயர் இருக்கிறது. சிவபெருமானின் இடது பாகத்தில் சக்திதேவி இருக்கிறாள். அதனால் ஆடல்நாயகனைத் தரிசிக்கும்போது கண்டிப்பாக இடதுகாலைத் தரிசிக்க வேண்டும். அப்படித் தரிசித்தால் செய்வினை பாதிப்பு, சனீஸ்வரால் ஏற்படும் தொல்லை மற்றும் பொதுவாக ஜாத கத்தில் இருக்கும் தோஷங்கள், வியாதிகள் நீங் கும். மோட்சம் கிடைக்கும் என்கிறது சாஸ்திரம்.

# கிருமிகளை கொல்லும் வெங்காயம்

இரண்டு சின்ன வெங்காயத்தை (நாட்டு ரகம்) எடுத்து வாயில் போட்டு மென்று, முழுங்காமல் ஒரு சில நிமிடங்கள் வாயை மூடிக்கொண்டு வைத்திருக்கவும், மெல்லும்போது ஏற்படும் எரிச்சலின் மூலம் தொண்டை மூக்கு பகுதிகளில் உள்ள கிருமிகள் அழிந்துவிடும்.

வெங்காயம் நறுக்கும் போது அதன் இதழ்களில் காணப்படும் ஆலினேஸ் என்ற நொதி அந்த இதழ்களில் காணப்படும் புரோப்பினிசிஸ்டைன் சல்பாக்சைடு என்ற பொருள் மீது வினை புரிந்து புரோப்பின் சல்பினிக் அமிலமாக மாறுகிறது. இந்த அமிலம் எளிதில் ஆவியாகி காற்றில் கலந்து நம் கண்களை அடைந்து உறுத்துகிறது. இதன் காரணமாகத்தான் கண்ணீர் சுரப்பியிலிருந்து நீர் சுரந்து வெளியேறுகிறது. வெங்காயத்தை மென்று வாயை மூடிவைக்கும்போது அந்த அமிலம் தொண்டை மூக்கு பகுதிக்கு பரவி தொற்றுக் கிருமிகளை அழிக்கும். இதனால்தான் நம் முன்னோர்கள் காலையில், பழைய சாதம் கஞ்சியுடன் சின்ன வெங்காயத்தை கடித்து சாப்பிடும் பழக்கத்தை கடைபிடித்து வந்தனர்.


www.aanmeegamalar.com

இரவு முழுவதும் தொண்டைப்பகுதி, வயிற்றுப் பகுதியில் சேரும் கிருமிகள், பழைய சாதத்துடன் வெங்காயத்தை கடித்து உண்ணும்போது தொண்டை, குடல்பகுதிகளுக்கு சென்று, அங்கிருக்கும் தொற்று களை அழிக்கும் மருந்தாக செயல்பட்டது.

இதனால்தான் நம் முன்னோர் பழைய சாதத்துடன் வெங்காயத்தை பயன்படுத்தி பெருவாழ்வு வாழ்ந்தனர்.

# அத்திப் பழ மருத்துவங்கள்

1. தினசரி 2 பழங்களை சாப்பிட்டால் உடலில் இரத்த உற்பத்தி அதிகரிக்கும். உடலும் வளர்ச்சி அடைந்து பருமனடையும்,
2. மலச்சிக்கலை நீக்க உணவிற்குப் பிறகு சிறிதளவு அத்தி விதைகளைச் சாப்பிடலாம்,
3. நாள்பட்ட மலச்சிக்கலை குணமாக்க 5 பழங்களை இரவில் சாப்பிட வேண்டும்.
4. போதைப் பழக்கம் மற்றும் இதர வியாதிகளால் ஏற்படும் கல்லீரல் வீக்கத்தைக் குணமாக்க அத்திப்பழங்களை காடியில் (வினிகர்) ஒருவாரம் வரை ஊற வைக்க வேண்டும். அதன்பின் தினசரி இரண்டு பழங்களை ஒருவேளை சாப்பிடலாம்.
5. தினசரி இரண்டு அத்திப்பழங்களை சாப்பிட்டு வந்தால் உடல் கவர்ச்சி கரமாக வளரும். இதில் முழு அளவு ஊட்டச்சத்து இருக்கின்றது.
6. சீமை அத்திப்பழம் வெண் குஷ்டத்தை குணமாக்கு கிறது. அரை கிராம் காட்டு அத்திப் பழத்தை தினசரிஒரு வேளை சாப்பிட்டு வந்தால் வெண் புள்ளிகள், வெண் குஷ்டம், தோலின் நிறமாற்றம் ஆகியவை மறையும்.


www.aanmeegamalar.com




# யானை, பாம்பு, சிலந்தியாக காட்சிதரும்

# ஸ்ரீகாளஹஸ்தி சிவன்

சிவன் மீது மிகுந்த பக்தி கொண்டிருந்த அந்த பாம்பு பாதாளத்தில் இருந்து மாணிக்கங்களை எடுத்து வந்து சிவலிங்கத்திற்கு தினமும் பூஜை செய்தது.

பாம்பு பூஜை செய்த முடித்த பின்னர் அங்கு வரும் யானை, மாணிக்கங்களை தனது துதிக் கையால் அப்புறப்படுத்திவிட்டு பூக்கள், தண்ணீர், வில்வ இலை கொண்டு சிவனை பூஜித்தது.

தான் வைக்கும் மாணிக்கங்களை தள்ளி விடுவது யார் என்பதை அறிய ஒரு நாள் அந்த பாம்பு பூஜைக்கு பின்னரும் அங்கேயே காத்திருந்தது. வழக்கம்போல் வந்த யானை, மாணிக்கங்களை தள்ளிவிட்டு பூஜை செய்தது.

கோபம் கொண்ட பாம்பு, யானையின் துதிக்கை வழியாக அதன் தலைக்குள் புகுந்து, யானை மூச்சு விட முடியாதபடி செய்தது. பரிதவித்த யானை துதிக்கையால் சிவலிங்கத்தை தொட்டு வழிபாடு செய்துவிட்டு, பாறையில் மோதி இறந்தது. யானையின் தலைக்குள் இருந்த பாம்பும் நசுங்கி இருந்தது.

**சிலந்தி கதை**

இதேபோன்று, சிவன் மீது பக்தி கொண்டிருந்த சிலந்தி ஒன்றும் அதே சிவலிங்கத்தை வழிபட்டு வந்தது. தனது உடலில் இருந்து வரும் நூலினால் சிவனுக்கு கோவில் கோபுரம், பிரகாரம் கட்டி பூஜித்து வந்தது. காற்றில் நூல் அறுந்து போனாலும் மீண்டும் கட்டியது.

ஒரு முறை சிலந்தி கட்டிய நூல் கோபுரத்தை எரிந்து சாம்பலாகும்படி செய்தார் சிவபெருமான். கோபம் கொண்ட சிலந்தி, எரிந்து கொண்டிருந்த தீபத்தை விழுங்க சென்றது. சிலந்தியின் பக்தியை கண்டு வியந்த சிவபெருமான், அதனிடம் என்ன வர வேண்டும் என்று கேட்டார்.

மீண்டும் பிறவாமை வேண்டும் என்று வேண்டிய அந்த சிலந்திக்கு முக்தி கொடுத்து தன்னுடன் ஐக்கியமாக்கிக் கொண்டார் சிவன். இதேபோன்று, தன் மீது கொண்டிருந்த அபரிமித பக்தியால் இறந்து போன யானை, பாம்பு ஆகியவற்றுக்கும் முக்தி அளித்தார் சிவன்.

இந்த அற்புதங்கள் நிகழ்ந்த தலம் தான் ஸ்ரீகாளஹஸ்தி. இங்கு லிங்கமாக காட்சியளிக்கும் சிவனின் திருமேனியை கூர்ந்து கவனித்தால், கீழ் பாகத்தில் யானை தந்தங்கள், நடுவில் பாம்பு, பின்புறம் சிலந்தி ஆகியவற்றை காணலாம்.

இங்கு எழுந்தருளியுள்ள சிவன், காளஹஸ்தீஸ்வரர் என்றும், அம்மன் ஞானபிரசுனாம்பிகை என்றும் அழைக்கப்படுகின்றனர்.



# புகையின் பலன்

வாரத்தில் குறைந்தது இரண்டு முறையாவது சாம்பிராணி புகை வீடு மற்றும் தொழில் செய்யும் இடங்களில் போடுவது செல்வ வளத்தை அதிகரிக்க செய்யும் இந்த புகையை நன்கு புகைக்க விட்டு வீடு முழுவதும் மூளை முடுக்குகளிலெல்லாம் காண்பிக்க வேண்டும். இதனால் வீட்டில் இருக்கும் துஷ்ட சக்திகள் அனைத்தும் ஒழியும்.

சாம்பிராணி புகையில் நீங்கள் எந்த பொருட்களையெல்லாம் போட்டால் என்ன மாதிரியான பலன்கள் எல்லாம் கிடைக்கும் தெரியுமா.

சாம்பிராணி புகையில் நீங்கள் காய்ந்த வேப்பிலைகளை போட்டு தூபம் இடும் பொழுது வீட்டில் இருக்கும் கொசு தொல்லை நீங்கும். மேலும் நோய் நொடிகளிலிருந்து நல்ல ஒரு நிவாரணமும் பெற முடியும். அதீத சக்திகளை கொண்டுள்ள சாம்பிராணி தூபம் அகில் போட்டு புகை மூட்டினால் அதிலிருந்து வரும் நறுமணத்தை குழந்தை பேறு இல்லாதவர்கள் சுவாசிக்கும் பொழுது அவர்களுக்கு குழந்தை பாக்கியம் விரைவில் உண்டாகும்.

சாம்பிராணி தூபம் போடும் பொழுது நீங்கள் வெண் கடுகு போட்டு வெடிக்க விட்டால் வீட்டில் இருக்கும் துஷ்ட சக்திகள் அனைத்தும் நீங்கி உங்களை சூழ்ந்து இருக்கும் பாகைகள் எதிரிகள் அனைவரின் சூழ்ச்சிகளும் முறியடிக்கப்பட்டு விடும். சாம்பிராணியுடன் வெட்டிவேர் அருகம்புல் ஆகியவற்றை காய வைத்து தூபம் போட்டால் தோஷங்கள் யாவும் விலகி சுபகாரியங்கள் மற்றும் காரிய சித்தி உண்டாகும் நினைத்த விஷயங்களை நினைத்த நேரத்தில் செய்து முடிக்க கூடிய அற்புத சக்திகள் உருவாகும்.

குலதெய்வ அருளும் வீட்டில் தெய்வ அருளும் பெற சாம்பிராணி தூபம் வெள்ளிக் கிழமையில் தூதுவளை போட்டு காண்பியுங்கள் எப்பேர்ப்பட்ட குலதெய்வ குற்றங்களும் நீங்கி இதன் மூலம் நீங்கள் உங்களுடைய குல தெய்வத்தை உங்கள் வீட்டிற்கு அழைத்து வர முடியும் சாம்பிராணி தூபத்தில் ஜவ்வாது மற்றும் சந்தனம் ஆகிய பொருட்களை போட்டு புகை மூட்டினால் நல்ல அதிர்ஷ்டம் உண்டாகும் வீட்டில் லட்சுமி கடாட்சம் நிறையும் காய்ந்த துளசி இலைகளை போடும் பொழுது தடைகள் யாவும் விலகி வெற்றி கிடைக்கும்.



புனிதவேல்

சாம்பிராணியுடன் நன்னாரி வேர் மருதாணி இலை நாய்க்கடுகு கரிசலாங்கண்ணி பொடி ஆகிய பொருட்களை போடும் பொழுது உங்களுக்கு துரோகம் இழைப்பவர்கள் கூட உங்களை நெருங்க முடியாமல் தடுக்கும் சகல ஐஸ்வர்யங்களும் பெரிய மனிதர்களின் ஆசீர்வாதங்களும் மகாலட்சுமியின் அருட் பார்வையும் உங்கள் மீது பரிபூரணமாக விழும்.




அந்தக்காலம் முதல் இந்தக்காலம் வரை சாம் பிராணி புகையை வீடு மற்றும் தொழில் செய்யும் இடங்களில் மட்டுமல்லாமல் பிறந்த குழந்தைக்கும் காண்பிப்பது உண்டு பிறந்த குழந்தைக்கு மிதமான புகையை தலைப் பகுதிக்கு காண்பிக்கும் பொழுது தலையில் இருக்கும் நீர் மண்டைக்குள் கோர்க்காமல், நோய் நொடிகள் அண்டாமல் பாதுகாப்பாக இருக்கும்.

எனவே சாம்பிராணி புகையை ரசாயன கலவைகள் கொண்ட நவீன வகை கம்ப்யூட்டர் சாம் பிராணி பயன்படுத்துவதை விட இயற்கையாக கிடைக்கும் இந்த சாம்பிராணி பொடியை போட்டு நன்மைகளை பெறலாம்.

தொகுப்பு: புனிதவேல்
தொடர்பு எண்: 9841807572

# தொற்றுநோயை நான் எவ்வாறு தவிர்ப்பது?

இந்த கேள்வி ஓஷோவிடம் சுமார் 40ஆண்டு களுக்கு முன்பு எய்ட்ஸ் காலத்தில் கேட்கப்பட்டது!

ஓஷோ கூறுகிறார்.

தவறான கேள்வியை நீங்கள் கேட்கிறீர்கள், கேள்வி சரியான கேள்வியாக இருக்க வேண் டும்: தொற்றுநோய் காரணமாக இறக்கும் பயத் தைத் தவிர்ப்பது எப்படி?

வைரஸைத் தவிர்ப்பது மிகவும் எளிதானது என்பதால், உங்களிடமும் உலகிலும் உள்ள பயத்தைத் தவிர்ப்பது மிகவும் கடினம்.

தொற்றுநோயிலிருந்து (தொற்றுநோயை) விட இந்த பயத்திலிருந்து மக்கள் அதிகம் இறப் பார்கள்.

இந்த உலகில் பயத்தை விட ஆபத்தானவைரஸ் எதுவும் இல்லை.

இந்த பயத்தைப் புரிந்து கொள்ளுங்கள், இல்லையெனில் உங்கள் உடல் இறப்பதற்கு முன்பு நீங்கள் ஒரு இறந்த உடலாகிவிடுவீர்கள்.

இதற்கு வைரஸுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. இந்த தருணங்களில் நீங்கள் உணரும் பயங்கரமான சூழ்நிலை கூட்டு பைத்தியம்...

இது ஆயிரம் முறை நடந்தது, தொடர்ந்து நடக்கும். கூட்டம் மற்றும் பயத்தின் உளவியல் உங்களுக்கு புரியவில்லை என்றால் அது தொட ரும்.

நீங்கள் வழக்கமாக உங்கள் பயத்தைத் தக்க வைத்துக் கொள்கிறீர்கள், ஆனால் கூட்டு பைத்தியக்காரத்தனமாக, உங்கள் நனவை முற்றிலுமாக இழக்க நேரிடும்.

உங்கள் பயத்தின் கட்டுப்பாட்டை நீங்கள் எப்போது இழந்தீர்கள் என்பது கூட உங்களுக்குத் தெரியாது.

பின்னர் பயம் உங்களை எதையும் செய்ய வைக்கும்.

அத்தகைய சூழ்நிலையில் நீங்கள் உங்கள் சொந்த வாழ்க்கையையோ அல்லது மற்றவர்களின் வாழ்க்கையையோ எடுத்துக் கொள்ளலாம்.

பயத்தைத் தூண்டும் செய்திகளைப் பார்க்க வேண்டாம்.

தொற்றுநோயைப் பற்றி பேசுவதை நிறுத்துங்கள், ஒரே விஷயத்தை மீண்டும் மீண்டும் சொல்வது சுய ஹிப்னாஸிஸ் போன்றது.

பயம் என்பது ஒரு வகையான சுய ஹிப்னாஸிஸ்.

இந்த யோசனை உடலில் ரசாயன மாற்றங்களை ஏற்படுத்தும்.

அதே கருத்தை நீங்கள் மீண்டும் மீண்டும் செய்தால், ஒரு வேதியியல் மாற்றம் தூண்டப் படுகிறது, அது சில நேரங்களில் மிகவும் நச்சுத்தன்மையுடையதாக இருக்கலாம், அது உங்களைக் கொல்லும்.

ஒரு தொற்றுநோயின் போது, உலகம் முழு வதும் ஆற்றல் பகுத்தறிவற்றதாகிறது. இந்த வழியில் நீங்கள் எப்போது வேண்டுமானாலும் கருந்துளைக்குள் விழலாம்.

தியானம் ஒரு பாதுகாப்பு ஒளிமையாக மாறும், அதில் எந்த எதிர்மறை ஆற்றலும் ஊடுருவாது.

– ஓஷோ








# சிவபெருமான் எடுத்த மனித அவதாரம்




அசுரர்கள் தங்கள் தவ பலத்தால் பல்வேறு வரங்களைப் பெற்று, பின்னர் அனைவருக்கும் இன்னல்கள் விளைவிப்பது தொடர்கதையாகி வந்த நிலையில்,

சுந்திரபத்திரன் என்ற அசுரன் சிவபெருமானை வணங்கி, பல அரிய வரங்கள் பெற்றான். அவற்றுள் முக்கியமானது அவனது மரணம் சிவசக்தி சொரூபமானவரால் மட்டுமே நிகழ வேண்டும். மேலும் அதற்கு முன்னால் எம்பெருமான் மனித அவதாரம் எடுத்து முடித்திருந்தால் மட்டுமே அவனைக் கொல்ல முடியும் என்ற சிக்கலான வரம் பெற்று இருந்தான்.

இதனால் இந்திரன் முதலான தேவர்களை விரட்டியடித்து அவர்களின் ஆட்சியைக் கைப் பற்றி, பலவகையில் தொல்லை கொடுத்து வந்தான். அசுரனின் தொல்லையைத் தாங்க முடியாமல் சிவபெருமானிடம் தேவர்கள் முறை யிட்டு காக்குமாறு வேண்டினர்.

தேவர்களை காக்கும் பொருட்டும் அசுரர்களை அழிக்கும் எண்ணத்துடன் சக்தியைக் காண எம்பெருமான் சென்றார்.



‘‘அசுரர்களின் அட்டகாசம் அதிகமாகி விட்டதால் அவர்களை உடனே அழித்து, தேவர்களைக் காக்க வேண்டும்; உடனே புறப்படு’’ என்று கூறி நின்றார்.

சிவன் கூறியதைக் கேளாமல் உமையவள் கண்மூடி, தியானத்தில் ஆழ்ந்து அமைதி பூண்டு இருந்தார்.

தாயிடம் இருந்து பதில் வரததால் கோபம் கொண்டார் சிவன். தியானத்தில் இருந்து விழித்தெழுந்த பார்வதிதேவி, சிவனை நோக்கி, ‘‘தியானத்தில் இருப்பது தெரிந்தும் சினமுற்றதால், நீங்கள் ஒரு நாழிகை மனிதனாகப் பிறக்க வேண்டும்’’ எனச் சாபமிட்டார்.

இறைவனின் திருவிளையாடலின்படி, பார்வதி தேவி எம்பெருமான்மேல் கோபம் கொண்டு, ஒரு நாழிகைப் பொழுது மனிதனாய் பிறப்பீர்கள்! என்று ஈசனை சபித்தாள்.

ஈசன் தன்நிலை மறந்து மனித அவதாரம் எடுத்து, கால்போன போக்கில் அலைந்து திரிந்தார். பரமனின் இந்நிலை கண்டு உமையவள் அச்சமுற்றாள். உலக ஜீவராசிகள் பயத்தில் நடுங்கின.

இதனால் அனைத்து இயக்கங்களும் தடைப் பட்டன. தேவர்கள் மனம் கலங்கினர். அவர்கள் அனைவரும் பார்வதி தேவியிடம் சென்று, ஈசனை ஆட்கொண்டு உலகை உய்விக்க வேண்டும் என்று வணங்கி நின்றனர். அதையேற்ற பார்வதி தேவி அங்காள பரமேஸ்வரியாக பூவுலகம் வந்து, மனம்போன போக்கில் அலைந்து கொண்டிருந்த சிவனைக் கண்டு மனம் வருந்தி, தன் சூலாயுதத்தை ஓரிடத்தில் வீசியெறிந்தாள்.

பூமியில் பதிந்த அந்த சூலாயுதத்திலிருந்து ஒளி தோன்ற, அங்கே சிவபெருமான் வந்து தன் பாதங்களை ஒரு நிலையாய்ப் பதித்து திருநிலையாய் நிற்க, அவரை பரமேஸ்வரி வணங்கினாள்.

அப்போது ஒரு நாழிகைப் பொழுது நிறைவுற, சிவபெருமான் மனித உருவம் நீங்கி தன்நிலை அடைந்தார். பெரிய மனிதராய் உலகை வலம் வந்த ஆண்டவராகிய நீவிர் பெரியாண்டவர் என்னும் பெயரில் வழங்கப் பெறுவீர்கள் என்று உமாதேவி கூற, தேவர்கள் அனைவரும் பெரியாண்டவரே என்று சொல்லி ஈசனின் பாதங்களைப் பணிந்தனர். அங்கேயே சிவபெருமான் சுயம்பு லிங்கமாக எழுந்தருளினார். இத்தகைய நிகழ்ச்சி நடந்த திருத்தலம்தான் திருநிலை.



கீதா-ராஜன்

### மனித வடிவில்

சிவபெருமான் மனித வடிவில் உலகை வலம் வந்தபோது, அவருடன் 21 சிவகணங்களும் எவர் கண்ணிலும் படாமல் மறைந்து




மாதம் இரண்டு முறை இலவசமாக வெளிவரும்
"ஆன்மிகமலர் மெயில் புத்தகம்"
aanmeegamalar.com

இணையதளத்தில்
இலவசமாக
டவுன்லோடு
செய்து படிக்கலாம்

சென்றன. அங்காள பரமேஸ்வரி சூலாயுதத்தை எறிந்தபோது, மண்ணில் மறைந்திருந்த சிவ கணங்கள் மண்கட்டிகளாக தெறித்து விழுந்தன.

பின்னர் ஈசன் சுயவடிவை அடைந்ததும் அவையும் சிவகணங்களாக வெளிப்பட்டன. இதைக் குறிக்கும் வண்ணம் இங்கே 21 சிவ கணங்களும் லிங்க வடிவில் உள்ளன. சிவனுடன் நந்தியும் மனித வடிவில் சென்றதனால், இத்தலத்தில் உள்ள நந்தி மனித உடலுடன் காணப் படுகிறது.

இங்குள்ள விநாயகரும் இரண்டு கரங்களோடு மனித உடலுடன் காட்சி தருகிறார். இவருக்கு திருநீறு அபிஷேகம் மட்டுமே செய்யப்படுகிறது. இந்தத் திருநீற்றைப் பூசி, உட்கொள்வதால், நோய் நீங்குவதாகவும்; கல்வி, செல்வம் கிட்டுவதாகவும் பக்தர்கள் கூறுகின்றனர்.

பல சித்தர்களும் முனிவர்களும் கண்ணுக்குப் புலப்படாமல் இந்த சிவபெருமானை வணங்கிச் செல்கின்றனராம். லிங்க வடிவில் உள்ள 21 சிவகணங்கள் மூலவரான பெரியாண்டவரை தினமும் பூஜிப்பதாக ஐதீகம் உள்ளது. சிவபெருமான் மனித வடிவில் வந்ததால் அவர் காலடிகள் நேரடியாகப்பட்ட தலம் இது.

### தலத்தின் மகிமை

சிவன், சக்தி ஆகிய இருவரின் அருளும் ஒருங்கே அமையப் பெற்ற திருத்தலம்.

பெரியாண்டவர் ஆலய புராண வரலாற்றின்படி சக்தியின் சாபத்தால் சித்தம் கலங்கி பித்தம் பிடித்த நிலையில் ஈசன் உலகை வலம் வந்து திருநிலையில் ஒருநிலையாய் நின்ற இடம்.

தாயின் கருவின்றி பெரிய மனிதராக பிறவியெடுத்து ஈசனே உலகை வலம் வந்த போது பார்வதியால் பெரியாண்டவர் என்று வணங்கப்பட்ட திருத்தலம்.

- ❖ சிவபெருமானின் பாதம் பட்ட தலம்.
- ❖ குழந்தைப் பேறு அருளும் பரிகாரத் தலம்.
- ❖ கலியுகத்தில் பலநூறு ஆண்டுகளுக்கு முன்பு ஈசன் ஜோதி ரூபமாக காட்சி அளித்து நின்ற தலம்.
- ❖ ஜோதியாக காட்சி தந்த வெட்ட வெளி இடத்தில் சுயம்புலிங்கம் பிரதிஷ்டை செய்து வணங்கி வழிபடும் தலம்.
- ❖ லிங்கத்தின் வலதுபுறம் சிவசக்தி இருவரும் ஒருங்கே அமர்ந்து தெய்வீகக் காட்சி தருகின்ற தலம்.
- ❖ பார்வதி தேவி திருநிலைநாயகி என அழைக் கப்படும் தலம்.
- ❖ சக்தியின் சூலாயுதம் திருநிலையில் வீழ்ந்த போது 21 மண் உருண்டைகள் சிதறி வீழ்ந்து அவை சிவகணங்களாக மாறிய தலம்.
- ❖ சுயம்பு லிங்கத்தைச் சுற்றி சிவகணங்கள் மண் உருக்கொண்டு இறைவனை பூஜிக்கும் தலம்.
- ❖ குளம் மற்றும் ஏரி ஆகிய இரு கரைகளுக்கு மத்தியில் இயற்கை சூழலில் அமைந்துள்ள ஆலயம்.

### தலத்தின் இருப்பிடம்

திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் ஆலயத் திலிருந்து சுமார் 8 கி.மி. தொலைவில் திருநிலை கிராமம் உள்ளது. இங்குதான் இத்தலம் அமைந் துள்ளது.

எந்த விதமான கட்டணமும் இல்லை

# தரத்தில் முதலிடம்

# முற்றிலும் இலவசம்




உலக அளவில் தரமான ஆன்மிக இ-புத்தகமாக வெளிவரும் **ஆன்மிக மெயில் புத்தகம்**

## இலவசமாக படிக்க

aanmeegamalar.com

aanmeegamalr app-லும் படிக்கலாம்

GET IT ON Google Play

உங்கள் இ-மெயில் முகவரியை எங்களுக்கு அனுப்பிவைத்தும் பெற்றுக்கொள்ளலாம் கீழ்கண்ட வாட்சப் எண் மற்றும் இமெயில் முகவரிக்கு உங்கள் இமெயில் முகவரியை அனுப்பிவைக்கவும்

பெற 9444228203

இமெயிலில் பெற aanmeegamalar@gmail.com





# 1400 வருடங்களுக்கு முன்னர் கட்டப்பட்ட குடைவரை கோயில்







www.aanmeegamalar.com

செங்கல், சுதை, மரம் உலோகம் என விரைவில் அழிந்துபடக்கூடிய பொருட்கள் அல்லாமல், ஆண்டாண்டு காலம் நீடித்து நிலைத்து நிற்கக் கூடிய, பெரும் கற்களை குடைந்து குடைவரை கோயில் அமைக்கும் முறையை உருவாக்கி, வட தமிழகத்தில் கோயில் கட்டிடக்கலையில் புரட்சியை ஏற்படுத்திய "முதலாம் மகேந்திரவர்மன்" எடுப்பித்த பல குடைவரைக் கோயில்களில் ஒன்று திருக்கழுக்குன்றம் வேதகிரீஸ்வரர் கோயிலில் மலையிலிருந்து இறங்கும் வழியில் அமைந்துள்ளது.

பிரம்மாண்டமான பாறையை குடைந்து மகேந்திரவர்மன் வர்மன் பாணியில் மும்மூர்த்திகளுக்குமான குடை வரையாக அமைக்கப் பட்டுள்ளது.

இங்கும் வாதாபி கொண்ட முதலாம் நரசிம்ம வர்மன் இக்கோயிலுக்கு வழிப்புறமாகதானம் வழங்கியதை அவனது தமிழ் கல்வெட்டு நமக் கெடுத்து கூறுகிறது.

திருக்கழுக்குன்றம் மலைமீது



வேலன்

அமைந்துள்ள ஒருகல் மண்டபத்தில் நரசிம்மவர்மனின் ஒரே ஒரு கல்வெட்டு உள்ளது.

**கல்வெட்டில் உள்ள பாடல்:**

ஸ்ரீ திருக்கழுக்குன்றத்து பெருமான்
னடிகளுக்கு களத்தூர் கோட்டத்து
...................... திருக்கழுக்குன்ற
த்து ஸ்ரீமலை மேல்
(மூ)லட்டானத்து பெருமான்
னடிகளுக்கு வழிபாட்டுப்புறமாக
வாதாபி கொண்ட நரசிங்கப்
போத்த(ர)சர் வைத்தது.

**பாடலின் விளக்கம்:**




இறைவன் பெயர் திருக்கழுக்குன்றத்துப் பெருமானடிகள் எனக் குறிக்கப்பட்டுள்ளது.

மூலட்டானம் என்பது கருவறை ஸ்ரீகோயிலைக்குறிக்கும்.

புறம் என்பது கோயில் பணிகளுக்காக விடப்பட்ட நிவந்தம் அல்லது கொடையைக் குறிக்கும். பணிகளுக்கேற்பப் பெயரமையும். இங்கே கோயிலின் வழிபாட்டுக்காக (பூசை)க் கொடை அளிக்கப்பட்டுள்ளது.

எனவே வழிபாட்டுப்புறம். அமுதுபடிக்காக (நைவேத்தியம்) எனில் அமுதுபடிப்புறம் என்றும், விளக்குக்காக எனில் விளக்குப்புறம் என்றும், மடைப்பள்ளிக்காக எனில் மடைப்புறம் என்றும் பலவாறு வழங்கப்படும்.

மகேந்திரவர்மனின் வல்லம் கல்வெட்டில் கண்டவாறே இங்கும் "போத்தரசர்" என்னும் பெயர் வந்துள்ளதை நோக்குக.

கோட்டம் என்னும் ஆட்சிப்பிரிவு பல்லவர் காலத்திலேயே இருந்துள்ளது கருதத்தக்கது.

நரசிம்ம வர்மனின் பெயர் இக்கல்வெட்டில் "நரசிங்க" என வந்துள்ளது குறிப்பிடத்தக்கது. பெரும்பாலும் பல்லவர் கல்வெட்டுகளில் "சிம்ம" என்னும் சொல்லுக்குப் பதில் "சிங்க" என்னும் சொல்லே பயின்றுவருகிறது எனலாம்.

ஸ்ரீ என்பது கிரந்த எழுத்து.

சில தகவல்கள் ஆச்சரியமளிப்பதாக உள்ளது. இந்த கல்வெட்டும் பல்லவ மாமல்லன் நரசிம்மனின் ஒரே தமிழ்கல்வெட்டு என குறிப்பிடுகின்றனர். கல்வெட்டின் புகைப்படமும் கல் வெட்டு இருக்கும் இடமும் உங்கள் பார்வைக்கு..

புராதன சின்னத்தில் இந்த குடைவரை கோயில் பாதுகாக்கும்பொருட்டு இந்திய தொல்லியல் துறை கட்டுப்பாட்டில் உள்ளது.

– வேலன், போன்: 9894836096
திருக்கழுக்குன்றம்.

ஆன்மிகம் தத்துவம் உடல்நலம் பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

# மனிதர்களின் ஆரோக்கியத்திற்கு உதவும் ஐம்பொன் நகைகள்

உலோகங்கள் மனிதனின் ஆரோக்கியத்திற்கும் துணை புரிகின்றன.

நமது உடலில் குறைபாடுள்ள சக்திகளையும், சத்துகளையும், மோதிரம் அல்லது காப்பு ஐம்பொன் உலோகங்கள் மூலம், உடலில்உள்ள நரம்பு மூலம் ராஜ உறுப்புகளுக்கு பிரபஞ்ச சக்தி களையும், ஈர்த்து உடலுக்கு தேவையான ஆத்ம சக்தி, மனோ சக்தி,ஞான சக்தி, ஆண்மை சக்தியையும் பெற ஐம்பொன் உலோகம் அணிவதன் மூலம் பெறிதும் துணை புரிகிறது.

நமது உடலில் உள்ள ஐம்புலன்களையும் சரிவர இயங்கச் செய்யும் வல்லமை படைத்தது.

வழிபாட்டின் மந்திர அதிர்வுகளையும் உடலில் வாங்கும்போது, சிந்தனை மேலோங்கும் மனம் சாந்தம்,உடல்சூறு சுறுப்பு அடைகிறது.

ஐம்பொன் உலோகத்தை அணிந்து அதன் விளைவுகளை நமது ஆன்மீக பெரியோர்களும் ,சித்தர்களும் அறிந்ததே என்பதில் ஐய்யமில்லை.

பொதுவாக அனைவரும் தங்கம் ,வெள்ளியில் நகைகள் அணிவது தான்வழக்கம் .

இதிலுள்ள உட்கருத்துக்கள் என்னவெனில் அந்த உலோகத்தின் சத்துக்கள்,சக்திகள் நம் உடலுக்கு கிடைக்கட்டும் என்பதுதான்...

இது மட்டும் போதுமா.. பஞ்சலோகத்தில் நகைகள் அணிந்தால் அது உடலுக்கு பெரும் பயனளிக்கும் என்பது நிரூபிக்கப்பட்ட உண்மை.

நாம் வாழும் பிரதேசத்தில் பொதுவாக உலோக அம்சம் குறைந்த மண் காணப்படுகிறது.

அதாவது மண்ணில் உள்ள இந்த சத்துக்கள் தான் நீர் மற்றும் உணவு பொருள்கள் வழியாக நம் உடலில் வந்து சேரும்.

இந்த குறை இயற்கையிலும் இங்கு வசிக்கும் மனிதரின் உடலுக்கும் பிரதிபலிக்கும் .

இதை புரிந்து கொண்டதனால் தான் பண்டைய மக்கள் பஞ்சலோகத்தின்




உபயோகத்தை பரிந்துரை செய்தனர் என்பதில் சந்தேகமில்லை.

இதனால்தான் நம் கோயில்கள் அனைத்திலும் பஞ்சலோக சுவாமி சிலைகள் ஏன் இருக்கின்றன என்றால்..

இதனை பார்ப்பதால் கண்கள் வழியாகஅதன் ஒளி ஊடுருவி உடலுக்கு நன்மை தரும்..

பஞ்சலோகத்தின் சக்தி மனித உடலை சுற்றி வரும் பிராண சக்தியை பலப்படுத்தி, உடலில் உலோக சக்தியை அதிகரிக்கவும் செய்யும்.

ஐம்பொன்சிலைகளுக்கு அபிஷகம் செய்து கிடைக்கும் பிரசாதத்தை உண்டால் அதன் சத்துக்கள் முழுமையாக கிடைக்கும்,என பெரியோர்கள் கருதினர்.

நமது முன்னோர்கள் இதை ஏதோ பேசன் என்பதற்காக அணியவில்லை.

பொதுவாக உடலை பிண்டம் என்போம்.




பூமி உள்பட பிரபஞ்சத்தை அண்டம் என்போம். அண்டத்தில் உள்ளதே பிண்டத்திலும் என்பது சித்தர் வாக்கு.

இதனை அன்றே உணர்ந்த அறிவுபூர்வமான நமது முன்னோர்கள் தங்கள் உடலில் எப்போதும் இந்த உலோகங்கள் உடலில் இருக்கும் வண் ணம் ஐம்பொன்னை அணிந்தனர்.

இந்த உலோகங்கள் நமது உடலைஅண்டத் துடன் இணைக்கும் மாய வேலையை செய்கின்றன என்பதை அவர்கள் உணர்ந்திருந்தனர்.

இந்த உலோகங்களை அணிவதால் உலோகத் தில் உள்ள சத்துக்கள் நம் உடலுக்கு ஈர்த்து நாம்மை இயக்கும் இது அறிவியல் ரீதியான உண்மை.

இந்த ஐம்பொன் ஆபரனகளுக்கு அதிக காந்த ஈர்ப்பு சக்தி உடையது ,

தங்கம், வெள்ளி, செம்பு, இரும்பு, ஈயம் என் பவை சேர்ந்த உலோக கலவையே பஞ்சலோகம்.

இதில் தங்கம் குருவின் சக்தியையும்,

வெள்ளி சுக்ரனின் சக்தியையும்,

செம்பு சூரியனின் சக்தியையும்,

இரும்பு சனியின் சக்தியையும்,

ஈயம் கேதுவின் சக்தியையும்

வழிபாட்டின் போதுஈர்த்து இழுத்து மக்களுக்கு வழங்கும் இப் படிப்பட்ட அதிசய உலோகத்தினை பல நூறு ஆண்டுகளுக்கு முன்பு கண்டு பிடித்து செயல்படுத்தினர்.

இத்தகைய சிறப்பு வாய்ந்த ஐம்பொன்னை கொண்டு கைகளுக்கு மோதிர மாகவோ, காப்பாகவோ செய்து உடலில் அணிந் தால் உடலின் வெப்பம் சமன்படும்.

மோதிர விரலில் உள்ள முக்கியமான நரம்பு மண்டல புள்ளி நமது நுண்ணிய உணர்வுகளை கட்டுபடுத்தும் தன்மை கொண்டுள்ளது,

மேலும் நம்முடைய மணிக்கட்டு பகுதியில் 5 முக்கியமான நரம்பு புள்ளிகள் உள்ளது.

இது சக்தி ஓட்டத்தை விரல் நுனியில் இருந்து இராஜ உறுப்புகளுக்கு கடத்துக்கிறது.

ஐம்பொன்பொன்னால் ஆன மோதிரங்கள் அல்லது காப்புகள் அணிவதால் பிரபஞ்சத்தில் உள்ள சக்தி எடுத்து ஒரு வேதியல் மாற்றத்தை உண்டு பண்ணி.

இந்த முக்கிய நரப்பு புள்ளிகள் வழியாக அனுப்பி நம்முடைய ராஜ உறுப்புகளை செழு மையாக இயங்க செய்யும் .

இராஜ உறுப்புகளான இதயம், மூளை,நுரை யீரல், சிறுநீரகம், கல்லீரல் இவற்றின் செயல் பாடுகளை ஊக்கப்படுத்தும்.

இரத்தத்தை சுத்தப்படுத்தும்,தோல் சம்பந்த மான நோய்களை தடுக்கும், இரத்த கொதிப்பை சீராக்கும். கைவலி மற்றும் உடல் உஷ்ணத்தை குறைக்கும்.

நரம்பு சம்பந்தமான வியாதிகளை குண மாக்கும்.

இப்படி முன்னோர்கள் கடைபிடித்த எளிய வழிமுறைகளை பின் பற்றி ஐம்பொன் உலோ கங்களை அணிந்து உடலை காக்கலாம்.

கண் திருஷ்டி ஐம்பொன் உலோகம் பயன் படுத்துவதால் உடலுக்கு எந்த தாக்கமும் ஏற்படாது.

ஐம்பொன் ஆபரணங்கள் அனைத்தும்நாள் ஆக ஆக தங்க நிறமாக மாறும்ஐம் பொன், பஞ்சலோகம், பஞ்சதாது என்ற பெயர்கள் குறிப்பிடும் பொருட்களின் உள்ளர்த்தம் நமக்கு எளிதாக புரியக்கூடியதுதான். பஞ்ச பூதங்கள் மற்றும் ஐம்புலன்களின் மீது ஆதிக்கம் செலுத்தக்கூடிய உலோகங்களின் சேர்க்கையாக அது இருக்கிறது.

நமது உடல் மற்றும் ஆன்மிக ரீதியான நல்ல மாற்றங்களுக்கும்,



ஆர். சதீஷ்,



அந்த உலோகங்களின் கூட்டுச்சேர்க்கை நம்மால் பல விதங்களிலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது.

பஞ்சதாது என்று சொல்லப்படும் ஐம்பொன்னால் செய்யப்பட்ட கவசத்தை ஸ்ரீகிருஷ்ணர், அர்ச்சுனனுக்கு தந்ததாக மகாபாரத செய்தி உண்டு. சாதாரண கவசத்தை விடவும் பஞ்சலோக கவசமானது, உடல், உள்ளம் மற்றும் உயிர் ஆகிய மூன்று விதங்களிலும் பாது காப்பை தரக்கூடிய வகையில் கிருஷ்ணரால் அர்ச்சுனனுக்கு தரப்பட்டது.

## உடல் நலத்தில் உலோகங்கள்:

மனிதர்களது உடல் ஆரோக்கியத்திற்கு உலோகங்கள் துணை நிற்பதாக,பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நமது முன்னோர்கள் கண்டறிந்துள்ளனர். மனித உடலின் நரம்பு இயக்கங்களில் ஏற்படும் மின் தூண்டுதல் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய, விரல்களில் அணியும் மோதிரம் அல்லது மணிக்கட்டில் அணியும் காப்பு ஆகிய வடிவங்களில் ஐம்பொன் ஆபரணங்கள் செய்து அணியப்பட்டன.

அதன் மூலம், உடலில் உள்ள குறிப்பிட்ட நரம்பு முடிச்சுகளை தொட்டவாறு இருக்கும் உலோக வடிவங்கள் வாயிலாக ‘எலக்ட்ரிக் ஸ்டிமுலேஷன்’ என்ற மின் தூண்டுதல்கள் ஏற்படுகின்றன. அதன் வாயிலாக பிரபஞ்ச ஆற்றலை ஆகர்ஷணம் செய்து ஆத்ம சக்தி, மனோ சக்தி, ஞான சக்தி ஆகியவற்றை பெறக் கூடிய அனுபவம் ஏற்பட்டது.

மோதிர விரலில் உள்ள முக்கியமான நரம்பு மண்டல புள்ளி, நமது நுண்ணிய உணர்வுகளை கட்டுப்படுத்தும் தன்மை கொண்டுள்ளது. மேலும் நம் முடைய மணிக்கட்டு பகுதியில் 5 முக்கியமான நரம்பு புள்ளிகள் உள்ளது. இது சக்தி ஓட்டத்தை விரல் நுனியில் இருந்து, உடலின் முக்கியமான உறுப்புகளுக்கு கடத்திச் செல்கிறது.

ஐம்பொன்னால் ஆன மோதிரங்கள் அல்லது காப்புகள் அணிவதால் பிரபஞ்சத்தில் உள்ள சக்தியை எடுத்து ஒரு வேதியியல் மாற்றத்தை உண்டு பண்ணி இந்த முக்கிய நரம்பு புள்ளிகள் வழியாக அனுப்பி, நம்முடைய உடலின் உறுப்புகளை நல்ல விதமாக இயங்கச் செய்யும். குறிப்பாக, ஒருவருக்கு உகந்த நவரத்தின வகைகள் அல்லது உப ரத்தின வகைகள் ஆகியவற்றை பஞ்சலோகத்தில் பதித்து அணிவது அதிர்ஷ்டத்தை அளிக்கக்கூடிய சிறந்த முறையாகச் சொல்லப்படுகிறது.

## உலோக சத்துக்கள்:

நாம் வாழக்கூடிய பகுதிகளில் எல்லா வித உலோக அம்சங்களும் கொண்ட மண் இருப்பதில்லை. மனித உடலுக்கு தேவையான உலோக சத்துகள் பல விதங்களாக உள்ளன. மண்ணில் உள்ள இயற்கையான உலோக சத்துகள் நாம் பருகும்



நீர் மற்றும் உண்ணும் உணவு பொருட்கள் மூலம் உடலுக்குள் சேர்கிறது.

குறைவான உலோக சத்துகள் கொண்ட குறிப்பிட்ட மண் அமைப்பின் தன்மையானது மனிதர்களின் உடலிலும், மனதிலும் பிரதிபலிப்பதாக அறியப்பட்டுள்ளது. இதை புரிந்துகொண்ட நம் முன்னோர்கள், பஞ்சலோகத்தை பல விதங்களில் உபயோகத்தில் கொண்டு வந்தனர். முக்கியமாக கோவில் களில் பஞ்சலோக சுவாமி சிலைகள் அமைக்கப்பட்டு, அதன் அபிஷேக தீர்த்தத்தை பிரசாதமாக உட்கொள்வதன் மூலமாக பல நன்மைகளை அடைந்தனர்..

– ஆர். சதீஷ், கடலூர்
aboorvam divine centre
போன்: 9655714283

# ஜாதி பாகுபாடு இல்லாத வேதகால சமூகம்




ரிக்வேத கால பண்பாட்டில் ஜாதி முறையானது நடைமுறையில் இருந்ததா? இல்லையா? என்றும் நம்மால் உறுதியாக அறிந்த கொள்ள முடியவில்லை. ரிக் வேதத்தில் உள்ள புருஷ சூக்தகம் விராட் புருஷனின் அங்கங்களில் இருந்து பிராமண, ஷத்ரிய, வைசீக, சூத்திர ஜாதியினர் தோன்றினர் என சொல்லப்பட்டு இருப்பதினால் அக்கால சமூகத்தில் நிச்சயம் ஜாதி பாகுபாடு இருந்திருக்க வேண்டும் என்று ஒரு சாரார் வலியுறுத்தி வருகிறார்கள்.

## கடவுள் உருவாக்கிய மதம்

அப்படி இருப்பதற்கான சாத்திய கூறுகள் இல்லை. ரிக்வேதம் உட்பட மற்ற வேதங்களிலும் இது சகல மனிதருக்கும் பொதுவானது என்ற கருத்துக்கள் தான் கூறப்பட்டிருக்கிறதே தவிர மனிதர்களை பற்றிய ஏற்றதாழ்வு மிக்க கருத்துக்கள் எதுவும் இல்லை. மேலும் ரிக் வேதத்தின் முழுமையான மொழி நடைக்கும் பெரிய வித்தியாசம் இருக்கின்றது. எனவே ரிக்வேதத்தில் புருஷ சூத்தகம் இடைசெருகலாக தான் சேர்க்கப்பட்டிருக்க வேண்டும் என்று சொல்வதோடு வேத கால சமூகத்தில்ஜாதி பாகுபாடுஇல்லை யென அழுத்தமாக சிலரும் சொல்கிறார்கள். மேலும் வேதகாலத்தில் ஜாதிகள் உண்டு என வாதிடுபவர்கள் தொழிலின் அடிபடையில் நிச்சயம் ஜாதிகள் இருந்திருக்க வேண்டும். அதவாது வேளாண்மை செய்பவர்கள், வியாபாரம் செய்பவர்கள், போர் தொழில் புரிபவர்கள், சமய சடங்குகளை நடத்தி வைப்பவர்கள் என்ற பிரிவினர் கண்டிப்பாக இருந்திருக்க வேண்டும் என வலியுறுத்துகிறார்கள். இதற்கு ஜாதியின் அடிப்படையில் வேதகால தொழில்கள் இல்லை. உதாரணமாக பிராமணர் என்ற சொல் கடவுளை துதிபாடல்களால் மகிழ்விப்பவர்கள் என்ற பொருளில் தான் வழங்கப்பட்டதே தவிர தொழிலின் அடிப்படையில் அல்ல என்று மறுப்பும் சொல்லப்படுகிறது.

பொதுவாக ஆரியர்களின் பண்டையகால

www.aanmeegamalar.com

வாழ்க்கை முறையை சற்று உன்னிப்பாக கவனித்தால் அவர்கள் நிரந்தரமாக ஒரே இடத்தில் வாழ்பவர்கள் அல்ல.

கால்நடைகளை மேய்பதற்காக புல் உள்ள பகுதிகளை நோக்கி பயணப்பட்டு கொண்டிருப்பவர்கள் என்பது தெரியவரும். நாடோடிகளாக இருக்கும் மக்கள் கூட்டத்தில்உடல் உழைப்பு செய்பவர்களுக்கும்காவல் காக்கும் வீரர்களுக்கும்தான்மதிப்பு மரியாதை இருக்குமே தவிர சடங்குகள் புரியும் உடல் உழைப்பு இல்லாத மனிதர்களுக்கு அவ்வளவாக முக்கியத்துவம் இராது.



யோகி ஸ்ரீ ராமானந்த குரு

அதாவது அவர்கள் விரும்பதகாத சுமையாகவே கருதப்படுவார்கள். ஆரியர்கள் கால்நடைகளை நம்பி வாழ்க்கை ஓட்டியவர்கள் என்பதினால் நிரந்தரமான வேளாண்மையை நிச்சயம் அவர்கள் செய்திருக்க வாய்ப்பு இல்லை. எனவே குறைந்த பட்சம் ரிக்வேத காலத்தில் மட்டுமாவது ஜாதி வேற்றுமைகள் பாராட்டப்பட நடைமுறை சாத்தியமில்லை. என்பதை ஆழ்ந்து சிந்திக்கும் போது உணர முடிகிறது.

கால்நடைகளை நம்பியே வாழ்க்கையை ஓட்டிய ரிக்வேத கால மக்கள் அதிகப்படியான மாமிச உணவுகளையே கொண்டவர்களாக இருந்தார்கள். ரிக்வேத ஆதாரப்படி திருமண சடங்குகள் யாகங்கள் போன்ற வழிபாட்டு நிகழ்வுகளின் மாமிச விருந்துகளே அதிகம் இருந்ததை அறியமுடிகிறது. செல்வத்தின் இருப்பிடமான பசுவை கொல்வது பாவம் என்ற பொருளில் அகணியா என்ற வார்த்தை ரிக்வேதத்தில் பல இடங்களில் பயன்படுத்தப்பட்டு இருந்தாலும் மாட்டு இறச்சியானது அக்காலத்தில் ஒதுக்கப்பட இல்லை என்று பல இடங்களில் அறிய முடிகிறது. மாமிசம் தவிர பார்லி, அரிசி, யவம் போன்ற தானியங்கள் பிராதன உணவாகவும் இருந்து இருக்கிறது. பால், தயிர், வெண்ணெய், காய்கறிகள், பழங்கள் போன்றவைகளும் அதிகமாக பயன்படுத்தப்பட்டு உள்ளது. போதை தருகின்ற சோம பானம், சுறா பானம் போன்றவைகள் விருந்து காலங்களில் ஏகமாக பயன்படுத்தப்பட்டு இருக்கிறது.

நகைகள் அணிவதில் இந்தியர்களுக்கு எப்போதுமே அலாதியான ஆர்வம் உண்டு. இந்திய மண்ணின் தன்மையே பொன்னின் மீது ஆசையை வரவழைத்து விடும் போல. இதற்கு ஆரியர்கள் மட்டும் விதிவிலக்காக முடியுமா என்ன? ஆரியஆண்களும் பெண்களும் கழுத்திலும்,காதிலும் கையிலும், மூக்கிலும் ஏன்தலை முடியிலும் கூட தங்க ஆபரணங்களை அணிந்து அழகு பார்த்திருக்கிறார்கள். தாடி, மீசை வைத்த ஆண்களும், மழுங்க சிரைத்த ஆண்களும் இப்போது போலவே அப்போதும் இருந்திருக்கிறார்கள். பெண்கள் மலர்களால் தங்களை அழகுப்படுத்தி கொள்வதில் ஆர்வம் காட்டியிருக்கிறார்கள். மெல்லிய ஆடைகளும், கம்பளி ஆடைகளும் அவர்களின் உடையாக இருந்திருக்கிறது.

ரிக்வேதகால ஆண்களும், பெண்களும் நடனமாடுவதில் வல்லவர்கள். வீணை,புல்லாங்குழல், முரசு போன்ற இசை கருவிகள் அவர்களின் இனிமையான வாய்பாட்டிற்கு மெருகூட்டி இருக்கின்றன. தேரோட்டம், குதிரை சவாரி அவர்களின் பொழுது போக்கு.

ரிக்வேதகால மக்கள் சிறந்த மருத்துவ அறிவு பெற்றவர்கள். விஸ்பலா என்பவன்கால்கள் துண்டிக்கப் பெற்றபிறகு செயற்கை கால்கள் பொருத்தியதாக ரிக்வேத பாடல் ஒன்று சொல்வதை வைத்து பார்க்கும் போது நமக்கே ஆச்சர்யம் வருகிறது. அறுவை சிகிச்சை செய்வதில் அவர்கள் நிபுணத்துவம் பெற்றிருக்காவிட்டால் நிச்சயம் செயற்கை கால் பொருத்த முடியாது. மருத்துவ தேவதைகளான அஸ்வினி குமாரர்கள் பல நோய்களுக்கான அரிய மருந்து வகைகளை அடுக்கடுக்காக சொல்லியிருக்கிறார்கள்.யசஷ்மா என்ற நோய் பற்றி வேதம் அடிக்கடி சொன்னாலும் அந்த நோயின் பாதிப்பு என்பது நமக்கு முழுமையாக தெரியவில்லை. அவர்களின் மருத்துவத்தை பற்றி பேசப் போனால் ஏராளமான பக்கங்கள் செலவாகும்.

வழி நடை பயணத்திலேயே வாழ்க்கையின் பெரும்பகுதியையும் ஆரியர்கள் செலவிட்டாலும், ரிக்வேத காலத்தில் சில இடங்களில் தங்க நேரிடும் போது வேளாண்மை தொழிலையும் அவர்கள் செய்திருக்கிறார்கள். நிஷ்காஎன்ற நாணயம் அவர்கள் பயன்படுத்தினாலும் கூட பெருவாரியான வியாபாரம் பண்டமாற்று முறையில் தான் நடந்திருக்கிறது. நங்கூரம், பாய்மரம் போன்ற சொற்களை அவர்கள் அதிகம் பயன்படுத்தவில்லை என்பதினால் கடல் வாணிபம்




அவர்கள் இடத்தில் இல்லை என்று சிலர் சொல்கிறார்கள். ஆனால் கப்பல் கட்டும் தொழில் நுட்பத்தை பற்றி ரிக்வேதம் பேசுவதால் கடல் பயணத்திற்காக அல்ல என்றாலும் நதிகளில் பயணப்படவும் அதன் மூலம் அவர்கள் பொருட்களை ஈட்டவும் அதிக வாய்ப்பு இருந்தது என்று சொல்லலாம்.

ரிக்வேதகால கிராமங்கள் அதிகப்படியான தூரத்தில் அமையாமல் பாதுகாப்பிற்காக அருகருகிலேயே அமைந்திருந்தன.

ரிக்வேத காலத்தில் இறைவழிபாடுஎன்பது இயற்கை வழிபாடாகவே இருந்தது. கடவுகளுக்கு அவர்கள் எந்த தனிப்பட்ட உருவத்தையும் கொடுத்தது இல்லை. இயற்கை சக்திகளை வருணன், அக்னி, வாயு, பிருத்வி என்று பல்வேறு பெயர்களில் துதி செய்து வழிபட்டனர். அப்படி வழிபட்ட தெய்வங்களில் ரிக்வேதத்தில் மட்டும் இருபத்தி மூன்று சக்திகளாகும். ஆரம்ப காலத்தில் வேதகால மக்களால் தீயஸ் என்னும் கடவுளும், பிருத்வி என்ற கடவுளும் பெரிதும் வழிப்படபட்டனர். காலம் செல்ல செல்ல இத்தெய்வங்கள் சிறப்பாக கொண்டாடப்படவில்லை. அதற்கான காரணம் என்னவென்று சரிவர தெரியலில்லை. இடி இடித்து மழை பெய்விக்கும் வருணனும், மேக கடவுளான இந்திரனுமே நான்கு வேத காலங்களிலும் முதலிடம் பெற்றிருந்தனர். அதிலும் வருணனுக்கு தனி இடம் கொடுக்கப்பட்டது. திராவிடர்களிடமிருந்து திருமாலை பற்றிய அறிவை பெற்ற பிறகு எப்படி திருமாலானவன் பாவங்களை மன்னிப்பவனாக கருதப்பட்டானோ அப்படியே வருணனும் வேதகாலத்தில் கருதப்பட்டான்.

வருணன் இந்திரன் ஆகிய கடவுள்களை தவிர மருத்துகள் புயல் கடவுளாகவும் ருத்திரன் மின்னல் கடவுளாகவும் வணங்கப்பட்டான். சிவன், திருமால், விநாயகன், முருகன், பார்வதி மகாலஷ்மி போன்ற கடவுள்களைப் பற்றிய நேரடியான குறிப்புகள் வேதங்களில் இல்லையென்றாலும் கூட அவர்களை பற்றிய மறைமுகமான குறியீடுகள் வேதத்தில் உள்ளன. மும்மூர்த்திகளில் ஒருவரான பிரம்மாவை விதாத், ஹிரன்யகர்ப்பன், பிரஜாபதி பிராமணஸ்பதி என்ற பெயர்களால் அழைக்கப்படுகிறார்.

இவைகளையெல்லாம் பார்க்கும் போது வேதகாலத்தில் பல கடவுள் வழிபாடு இருந்ததாக நமக்கு தோன்றும். நான் பல சமயங்களில் இந்து மத சிறப்புகளை சொல்லுகின்ற போது சில பகுத்தறிவாத நண்பர்களும் மாற்றுமத சகோதரர்களும் இந்து மத வேதங்கள் கடவுள் பல என சொல்லி தவறான பாதையை காட்டுகிறது என்று குறைபட்டவர்களும் உண்டு. குற்றம் சாட்டியவர்களும் உண்டு. அவர்களுக்கெல்லாம் எனது ஒரே பதில் இந்து மதத்தில் பல கடவுள் பெயர்கள் உண்டு. அவைகள் கடவுளின் ஒவ்வொரு செயலிலும் அவருக்கு உள்ள பெயரே தவிர அவரே பல அல்ல, என்பது தான். உதாரணமாக இயற்கை மழையாக கொட்டுகின்ற போது இந்திரன் என்று அழைக்கப்படுகிறது. மழை தண்ணீரே வெள்ளமாக பாயும் போது வருணன் என்று அழைக்கப்படுகிறது. ஆனாலும் இயற்கை ஒன்றே தான். இந்து மத தத்துவப்படி கடவுள் இயற்கையாகவும் இருக்கிறார். இயற்கைக்கு அப்பாற்பட்டும் இருக்கிறார். இயற்கையை வழிநடத்துபவராகவும் இருக்கிறார். இதற்கு என்ன ஆதாரம் என்று சிலர் கேட்கலாம். அவர்களுக்காக ரிக் வேதத்தில் உள்ள ஒரு பாடலை கீழே தருகிறேன்.

'இந்திரனென்றும், மித்திரனென்றும், வருணனென்றும்,
அக்கினியென்றும், தெய்விகம் பொருந்திய கருடமதன்
என்றும் உன்னை வழங்குவர்.'
'ஒரு பொருளாம் உனக்குக்
கவிஞர் பல பெயர்கள் அளிப்பார்
அக்கினியும், யமனும் மாதிசுவனும்
நீயே அன்றோ?'

இதை விட சிறந்த ஆதாரம் வேறு எதையும் தர இயலாது. இன்னும் ஒருபடி மேலே சொல்ல வேண்டுமென்றால் இன்று கடவுள் ஒருவரே என்று சொல்லுகின்ற மதங்கள் கூட இந்திய வேதத்தில் இருந்து தான் ஒரு தெய்வ வழிபாட்டை பெற்றிருக்கின்றன என்று சொல்லலாம். அதாவது பாரசீகத்தில் தோன்றிய சொராஸ்தியர் என்பவர் உபநிஷத ஞானியொருவரின் உபதேசத்தை கேட்ட பிறகே அஸ்சுரமஸ்தா என்ற முழுமுதற் கடவுளை அறிந்து சொராஸ்திய மதத்தை ஸ்தாபித்தார். அவரின் அஸ்ரமஸ்தா தான் யுத மதத்தின் ஜெகோவா கடவுளானார். ஜெகோவா கடவுளே கிறிஸ்துவத்தில் பரிசுத்த ஆவியானார். இந்த பரிசுத்த ஆவிதான் இஸ்லாம் சொல்லும் அல்லா. எனவே உலகிலுள்ள எல்லா மதங்களுக்கும் ஆதார தத்துவத்தை கொடுத்தது இந்து மத வேதங்கள் தான்.

யோகி ஸ்ரீ ராமானந்த குரு
மேலும் தொடர்பு கொள்ளவும்
போன்: 09442426434

# இச்சா சக்தி வலிமை வாய்ந்ததாகும் போது சாத்தியமாகாதது எதுவுமில்லை

குருதேவர் அருளுகிறார்: "ஒரு நல்ல ஆரோக்கியமான மற்றும் ஆக்கபூர்வமான இலக்கை தேர்ந்தெடுங்கள்; அதன்பின் அதை அடையப்போகிறோம் என்று தீர்மானம் செய்துகொள்ளுங்கள். எத்தனை முறை தோல்வியுற்றாலும் பரவாயில்லை, தொடர்ந்து முயன்றவண்ணம் இருங்கள். எது நடந்தாலும் சரி, "இப்பூமியானது நொறுங்கிப்போகலாம். ஆனால் நான் என்னால் முடிந்தவற்றை தொடர்ந்து செய்த வண்ணம் இருப்பேன்," என நீங்கள் மாற்ற முடியாதபடி தீர்மானித்திருந்தால் நீங்கள், செயல் வலிமை வாய்ந்த இச்சா சக்தியைப் பயன்படுத்துகிறீர்கள். மேலும் நீங்கள் வெற்றி அடைவீர்கள். அந்த செயல் விரைவான சக்திதான் ஒருவரை செல்வந்தராகவும், இன்னொருவரை வலிமையுடையவராகவும், மற்றொருவரை ஒரு மகானாகவும் ஆக்குகிறது."




"இறைவனை அறிந்தவர்கள் பலர் மட்டுமே அல்ல; நீங்கள் சரியான வகையில் முயற்சி செய்வீர்களானால், இறைவனை நீங்கள் காண்பீர்கள். நாளைக்கு நீங்கள் இறக்கக்கூடும் என்றிருக்கையில், ஒரு பெரிய மருத்துவராகவோ அல்லது வெற்றியுள்ள தொழிலதிபராகவோ ஆவதற்கு இன்று நீங்கள் வலிமையான இச்சாசக்தியை உபயோகிப்பதில் என்ன பயன்? இறைவனை முதலில் அறிவதற்கு உங்களுடைய இச்சாசக்தியை உபயோகியுங்கள்; அப்போது அவன் உங்களுடைய வாழ்வின் பாதையை வழிநடத்துவான்".

அவர் தொடர்கிறார்: "இறைவனைக் காணவேண்டுமென்ற மிக ஆழ்ந்த ஆவலுடன், "இறைவா, இறைவா, இறைவா", என இரவும் பகலும் அகத்துள் உரைக்கும்போது நீங்கள் வலிமை வாய்ந்த இச்சாசக்திதயை பயன்படுத்துகிறீர்கள். வேறு எதற்கும் அல்லாது இறைவனை நாடுவதற்கு உங்களுடைய இச்சா சக்தியை பயன்படுத்துவது மேலானதாகும். எனது குருதேவர் ஸ்ரீ யுக்தேஸ்வர் என்னுள் விழிப்படையச் செய்த தெய்வீக இச்சாசக்தியால் இறைவன் என்னை ஆசீர்வதித்துள்ளான் என்பதில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். எனது குருதேவரை சந்திப்பதற்கு முன்பு எனது இச்சா சக்தியை இடம், வலம் என பயனற்ற விஷயங்களில் உபயோகித்துக்கொண்டிருந்தேன். ஆனால் அப்போதும்கூட எதாவதொன்றை நான் ஆரம்பித்தபோது அதை நிறைவேற்றுவதற்கு எனது வலிமை வாய்ந்த இச்சா சக்தியைப் பயன்படுத்தினேன்."

அவர் தனக்கு நிகழ்ந்த ஒரு நிகழ்வைக் கூறுகிறார்: "மற்றவர்களுக்கு உதவுவதற்காக முதன்முதலில் நான் வலிமைவாய்ந்த இச்சா சக்தியை பயன்படுத்தியது எனக்கு நினைவு இருக்கிறது. எனது நண்பனும் நானும் வெறும் சிறுவர்கள்தான். ஒரு நாள் நான் அவனிடம் கூறினேன். "நாம் ஐந்நூறு மக்களுக்கு உணவளிக்கப் போகிறோம்."

"ஆனால் நம்மிடம் ஒரு பைசா கூட இல்லையே" என ஆச்சரியத்துடன்

## 105 பாகம்

## பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

### மனித வாழ்வு மேம்படுவதற்காக



குருப்ரியா

கூறினான். “இருந்தும் அதையே நாம் செய்யப் போகிறோம்” என நான் அவனுக்கு உறுதி அளித்தேன்,“ அது மட்டும் அல்லாது அதற்கான பணம் உன் மூலமாக வரப்போகிறது என நினைக்கிறேன்.”

“அது நடக்காத காரியம்!” என அவன் ஏளனமாகக் கூறினான். உள்ளுணர்வான ஒரு நம்பிக்கை என்னைக் கூற வைத்தது: “உனது தாயின் மனதை எவ்வகையிலும் புண்படுத்தாதே. அவள் உன்னை எதைச் செய்யச் சொன்னாலும் அதைச் செய்.”

ஒரு நாள் கழித்து அவன் ஓடிவந்து என்னிடம் இந்தக் கதையைக் கூறினான். “நான் குளித்துக்கொண்டிருந்த சமயம் என் அன்னை என்னை அழைத்தாள். ‘நான் குளித்துககொண்டிருக்கும்போது என்னை தெந்தரவு செய்யாதே’, என நான் கூற இருந்தேன். ஆனால் அதற்குப் பதிலாக அவளுக்கு என்ன வேண்டும் என்று கேட்டேன். அருகாமையில் வாழ்ந்த எனது சிற்றன்னையைச் சென்று பார்க்கும்படி அவள் எனக்குக் கூறினாள். நான் ‘சரி’ எனக் கூறினேன்.

நான் எனது சிற்றன்னையைப் பார்க்கச் சென்றபோது அவள் என்னிடம் கூறிய முதல் விஷயம், “நீ பழகும் அந்தப் பைத்தியக்கார சிறுவன் யார்? உனக்கு புத்தி கெட்டுப்போய்விட்டாதா? ஐந்நூறு பேருக்கு நீங்கள் உணவளிக்கப் போகிறீர்கள் என்று நான் கேள்விப்பட்டதெல்லாம் என்ன?” என்பதாகும். நான் அவளிடம் கோபமுற்றேன். ‘நான் இப்போது செல்ல வேண்டும்’, என அவனிடம் கூறி வெளியே செல்ல ஆரம்பித்தேன். ஆனால் அவன் என்னை தடுத்துக் கூறினாள் : “உன்னுடைய நண்பன் பைத்தியக்காரனாக இருக்கலாம். ஆனால் அவனுடைய யோசனை நல்லது . இதோ இருபது ரூபாய்.”

“என் நண்பன் அதிசயத்தில் ஏறக்குறைய மயக்கமுற்று விட்டான்? இச்செய்தியை என்னிடம் கூறுவதற்கு அவன் உடனேயே ஓடிவந்தான். அரிசியையும் மற்றப் பொருட்களையும் வாங்குவதற்காக நாங்கள் சென்றபோது, எங்கள் திட்டத்தைப் பற்றி அண்டைவீடு மனிதர்கள் ஏற்கனவே கேள்விப்பட்டிருந்தார்கள். அவர்கள் இன்னும் அதிக உணவுபொருட்களை அளித்தனர். இறுதியில் நாங்கள் இரண்டாயிரம் பேருக்கு உணவளித்தோம்! தெய்வீகமாக சக்தியூட்டப்பட்ட அதே இச்சா சக்தி கல்கத்தாவில் நான் நிறுவிய சரஸ்வத் நூலகம் என்ற முதல் நூலகத்திற்குக் காரணமாக இருந்தது.”

மேலும் அவர் கூறுகிறார்: “நல்ல விஷய்ஙகளைச் செய்யவேண்டும் என உங்கள் மனதில் தீர்மானிக்கும்போது, நீங்கள் வலிமைவாய்ந்த இச்சா சக்தியை பயன்படுத்தினால் நீங்கள் அதைப்பின்பற்றி, அவற்றை நிறைவேற்ற முடியும். எந்தச் சூழ்நிலைகளாக இருந்தாலும் சரி, நீங்கள் தொடர்ந்து முயற்சித்துக்கொண்டிருந்தால், எதன் மூலம் உங்கள் இச்சாசக்தி தகுந்த வெகுமதியைக் காணுமோ, அந்த உபாயத்தை இறைவன் உருவாக்குவான். “நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாய் இருந்தால்ஞ்ஞ்.. இந்த மலையைப் பார்த்து, நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்கிறேன்”, என்று ஒரு பெரிய மகான் கூறியிருக்கிறார். அப்பொழுது குறிப்பிட்டார். உங்களுடைய இச்சா சக்தியை இடைவிடாது நீங்கள் பயன்படுத்துவீர்களானால், எத்தகைய இடையூறுகள் ஏற்பட்டாலும் அது வெற்றி மற்றும் ஆரோக்கியம், மக்களுக்கு உதவுவதற்கான சக்தி ஆகியவற்றை உண்டாக்கும். மேலும் எல்லாவற்றிற்கும் மேலாக அது இறை தொடர்பை உண்டாக்கும். “

“இவ்வகையான இச்சா சக்தியை, நல்லதை நிறைவேற்றுவதற்காக, தேவைப்படின் சமுத்திரத்தையே வற்றிப் போகச் செய்யும் இச்சா சக்தியை நீங்கள் வளர்க்க வேண்டும். மிகப்பெரிய இச்சாசக்தி தியானம் புரிய பயன்படுத்தப்பட வேண்டும். இறைவன், நமது தெய்வீக இச்சாசக்தியை நாம் கண்டுபிடித்து, அதை அவனைக் காணப்பயன்படுத்தவேண்டும் என அவன் விழைகிறான். இறைவனை தேடும் இந்த வலிமை வாய்ந்த இச்சா சக்தியை விருத்தி செய்யுங்கள். ஆழ்ந்த அறிவுமிகுந்த சொற்கள் உங்களுக்கு முக்தி அளிக்காது; மாறாக தியானத்தின் மூலமாக உங்களுடைய சொந்த முயற்சிகள் அதை அளிக்கும்.”

பரிகாரம் 16

இறைவனின் குழந்தை என்ற வகையில் உங்களுடைய சுதந்திரத்தைப் பேணுங்கள்.

குருதேவர் அருளுகிறார்: “உங்களுடைய மனம் வலிமையாக இருந்தால், அத்துடன் உங்கள் தேகத்தை மறந்து நீங்கள் உங்களையே இறைவனிடம் சரணடையச் செய்வீர்களானால், இறைவனின் ஒரு குழந்தை என்ற வகையில் உங்குளுடைய சுதந்திரத்தை நீங்கள் பேண வல்லவராவீர்கள். எந்த ஒரு பழக்கமும் உங்களை நிரந்தரமான பிடியில்கொண்டிருக்கவில்லை என உங்கள் மனதில் தியானம் செய்துகொள்ளுங்கள்; உங்களுடைய அறிவு வலிமையாக இருந்தால், நீங்கள் என்ன செய்ய வேண்டும் என்பதை ஒரு கணப்பொழுதில் உங்களையே நம்பவைக்கலாம். சாதாரண

www.aanmeegamalar.com

பழக்கங்களின் பலவந்தமான உள்ளுணர்வைக் கடந்து உங்களை மேலெழும்பச் செய்ய வல்லவராக்கி, உங்களுள் சுதந்திர விருப்ப சக்தியை புத்துயிர் பெறச்செய்யும் அந்த அறிவை விழிப்புறச் செய்யுங்கள். “பாவிகளிலெல்லாம் நீ பெரும்பாவியாயிருப்பினும் பாவங்களையெல்லாம் ஞானமாகின்ற தெப்பத்தால் நீ கடந்து செல்வாய்.” (பகவத் கீதை அத் 4 ஸ்லோகம் 36)

“பழக்கங்களை விட்டொழிப்பதற்கான மிகச்சிறந்த மார்க்கம், உடனேயே அவற்றை உங்கள் மனதிலிருந்து வெளியேற்றுவதற்கு சங்கல்பிக்க வேண்டுவதாகும். உங்களுடைய உறுதி பலவீனமடையாமலிருக்க , அவற்றிலேயே தயங்கிக்கொண்டிருக்காதீர்கள். விவேகம்தான் பழக்கங்களிலிருந்து உங்களை மீட்க முடியும். இனிப்புப் பண்டங்களை உண்ண வேண்டாம் என ஒரு சிறுவனுக்கு ஒருவர் கூறினால், அவற்றை எப்பொழுதையும்விட அதிகமாக அவன் விரும்புவான். அவன் வளர்ந்ததும் அவனுக்கு நீரிழிவு நோய் ஏற்படும்பொழுது தொடர்ந்து இனிப்புப் பண்டங்களை உண்டால், அவன் மரணமடைவான் என அவனுடைய மருத்துவர் கூறுகின்றார் என்று வைத்துக்கொள்வோம். அப்பொழுது மருத்துவர் சொல்வது சரி என்பதை அவனுக்குக் கூறுவதும், பல வருடங்களாக இருந்த இனிப்புப் பண்டங்களை உண்ணும் பழக்கத்தை விரைவாகக் கைவிட வேண்டுமென அவனுக்கு தைரிய மூட்டுவதும் விவேகம்தான். விவேகத்தின் மூலம் மனிதன் கற்றுக் கொள்கிறான் சில சமயங்களில் !”

குருதேவர் தனது அனுபவ நிகழ்வு, ஒன்றினை கூறுகிறார்: “இந்தியாவில் ராஞ்சியிலுள்ள எனது பாடசாலையில், எதைச் செய்யவேண்டுமெனக் கூறப்பட்டதோ, அதற்கு அப்படியே எதிர்மாறாகச் செய்வதில் விருப்பம் கொண்டிருந்த ஒரு சிறுவன் என் நினைவிற்கு வருகிறான். ஆகவே அவன் எதைச் செய்ய வேண்டாமென நான் விரும்பினேனோ, அதைச் செய்யும்படி அவனுக்குக் கூறினேன். இவ்விதமாக நான் விரும்பியதை, அவனைச் செய்ய வைத்தேன். காலப்போக்கில் அவன் இருபொருள்படும் படியான வகையில் ‘புத்திமான்’ ஆகி தன்னை நல்ல வகையில் மாற்றிக் கொண்டான்.”

“பழக்கத்தின் அடிமைத்தனத்தால் துன்புறும் அனைவருக்குமான என் செய்தி இதுவாகும். நீங்கள் என்ன செய்ய வேண்டுமெனக் கூறிக் கொண்டு, உங்களை அடிமையாக நடத்தும் அந்தப் பழக்கங்களுக்கு எதிராக திருப்பி, “உங்களை செவளியேற்றக்கூடிய சாட்டை என்னிடம் உள்ளது. எனது விருப்பத்திற்கு என்னை இனிமேலும் நீங்கள் செயற்பட வைக்க முடியாது, நான் சுதந்திரமாகப் பிறந்த இறைவனின் குழந்தை. அவனுடைய சொரூபத்தில் நான் படைக்கப்பட்டுள்ளேன். நான் எல்லா விஷயங்களிலும் செய்ய வேண்டிய சரியானதைச் செய்வதற்கு எனக்கு தெய்வீகமாக அருளப்பட்ட அறிவையும் சுதந்திர விருப்பத்தையும் பயன்படுத்துவேன்,” எனக் கூறுங்கள்.”

மேலும் அவர் தொடர்கிறார்: “என்னைப் பற்றிக்கொள்ள நாடிக்கொண்டிருந்த ஒரு பழக்கத்தை அழிப்பதற்காக நான் எனது இச்சாசக்தியை அனேக தடவைகள் பயன்படுத்தியுள்ளேன். சில குறிப்பிட்ட உணவுகளை உண்டபோது நான் அவற்றிற்கான ஓர் ஆசையால் கட்டுப்பட்டுக்கொண்டிருப்பதைப் பார்த்ததும், அந்த ஆசை மறையும் வரையில் அந்த உணவு வகைகளை உண்பதை நிறுத்திவிட்டேன்.” மேலும் அவர்தன் அனுபவம் ஒன்றினை கூறுகிறார். “நான் சிங்கப்பூருக்குச் சென்றிருந்தபோது அங்கு மிகவும் ருசியான ஒரு பழம் உள்ளதைக் கண்டேன். ஆனால் அதற்கான தீவிர ஆசையை நான் ஏற்படுத்திக்கொள்ளாதவாறு என்னை கண்காணித்துக் கொண்டேன். நான் எச்சரிக்கையாக இல்லாவிடில் காலை, மதியம் மற்றும் இரவிலும்கூட நான் அதை விரும்புவதைக் கண்டிருக்க முடியும் என்பதை நான் அறிவேன். இவ்விதமாகவே நாம் நம்மை அடிமைகளாக்கிக் கொள்கின்றோம். எனவே அந்த ஒரு தினம் நான் அப்பழத்தை முழுமையாக மகிழ்ந்து அனுபவித்திருந்தாலும், அடுத்த நாள் அது இல்லாதபோது, நான் வருத்தப்படவில்லை. நான் மகிழ்ந்து அனுபவிக்கும் பொருட்களைப்பற்றி கவனமாக இருந்தால், பயப்படத்தேவையில்லை. எந்தவிலை கொடுத்தும் நமது சுதந்திரத்தை நாம் காப்பாற்றிக்கொள்ள வேண்டும்.”

“பெரும்பாலானோர் தமக்கு நல்லதல்ல என அவர்களுக்குத் தெரிந்துள்ள உணவுவகைகளைத் தொடர்ந்து உண்கின்றனர். ஆனால் நான் ஓர் உணவை உண்ணமாட்டேன் எனக் கூறினால், அதுவே அதன் முடிவாகும். உங்களுடைய பழக்கங்கள் கட்டாயப்படுத்துவதாலோ, அல்லது உங்களுடைய நண்பர்கள் வலியுறுத்துவதாலோ இன்றி, உங்கள் சொந்த அறிவு உங்களுக்குக் கூறுவதால் செயலாற்றுவது உண்மையான சுதந்திரம் அல்லவா? விவேகத்தினால் ஏற்படும் திட நம்பிக்கையின் சக்தி எத்தகையது எனில், நீங்கள் செய்யவேண்டிய சரியான காரியத்தைச் செய்வதற்கு பழக்கங்களை சார்ந்திருக்கத் தேவையில்லாமல் ஆகிவிடுகிறது. நீங்கள் ஒரு காரியத்தைச் செய்வதற்கான விவேகத்தில் நம்பிக்கை ஏற்பட்டவுடன், அக்காரியத்தைச் செய்வதிலிருந்து உங்களை எதுவும் விலக்க முடியாதிருக்க வேண்டும். விவேகத்தின் சக்தி யால் பழக்கங்களை நீங்கள் விரும்பிய உடன் ஏற் படுத்த முடியும். விவேகம் கட்டளையிடும் எதையும் நான் விரும்பும்படி என்னால் செய்ய முடியும்.”

“அனேகருடைய மனரீதியான பழக்க மாதிரி வடிவங்கள் நிலைபெற்று விட்டு, அவற்றை மாற்றுவதை அவர்களுக்கு கடினமாகி உள்ளது. ஒழுங்குமுறை மற்றும் சுய கட்டுப்பாட்டின்மூலம் தமது மனங்களை வளைத்துக் கொடுக்கக்கூடியவாறு வைத்துக்கொண்டுள்ளோர், சுலபமாக மாறமுடியும். குழைந்த கனியைப்போன்றிருக்கவேண்டும். விவேகம்

மனதை இளக்கமாக வைத்துக்கொள்கின்றது. இதுதான் சுதந்திரமாகும். முழு மானிட வர்க்கமும் பழக்கத்திலிருந்து விடுபட்ட அந்த சுதந்திரத்தை அனுபவிக்கவேண்டுமென நான் விரும்புகிறேன். பழக்க அடிமைத்தனத்திலிருந்து உங்களை நீங்கள் விடுவித்தவுடன், சுதந்திரமாகப் பிறந்த இறைவனின் குழந்தை என்ற வகையில் செயல்படுவதைவிட அதிக ஆனந்தம் எதுவுமில்லை என்பதை நீங்கள் அறிவீர்கள்."

அவர் மேலும் தொடர்கிறார்: "வாழ்க்கை உங்களை தோற்கடித்து வீழ்த்த ஒருபோதும் அனுமதிக்காதீர்கள். வாழ்க்கையை தோற்கடியுங்கள்! சோதனைகளின் மத்தியிலும், "அபாயமும் நானும் ஒன்றாகப் பிறந்துள்ளோம். நான் அபாயத்தைவிட அதிக அபாயமானவன்," என உறுதிப்படுத்திக் கூறுங்கள். இது எப்போதும் நீங்கள் ஞாபகத்தில் வைத்துக்கொள்ளவேண்டிய ஓர் உண்மையாகும். அதைக் கையாளுங்கள். அது பலனளிப்பதை நீங்கள் காண்பீர்கள். நீங்கள் கெஞ்சுகின்ற ஒரு மனிதப் பிறவியாக நடந்து கொள்ளாதீர்கள். இறைவனின் ஒரு குழந்தை !"

இவ்வுலகம் தற்போது, கொடிய நோய்கள் மற்றும் பிரச்சனைகள் எனும் பெருங்கடலில் மிகப்பரிதாபமாக மூழ்கிக்கொண்டிக்கிறது. 1893 முதல்1952 வரை வாழ்ந்திருந்த ஒரு பெரிய மகான் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் சொற்பொழிவாற்றியுள்ளார். தற்பொழுது அந்தச் சொற்பொழிவுகள் காலத்தை வென்றுள்ள மிகப்பெரிய நூல்களாகிவிட்டன. இன்றைய காலகட்டத்திற்கு மிகவும் தகுந்த, சிறந்த நூல்களாகக் காணப்படுகின்றன. மிகவும் சோகமாக பரிதாபகரமான நிலையில் இருக்கும் இவ்வுலகில் நிகழ்ந்து கொண்டிருக்கும் கொடியவற்றிற்கான காரணங்களையும் அதற்கான பரிகாரங்களையும் அவர் அருளியுள்ளார். அவற்றில் சிலவற்றை கட்டுரை 101 முதல் 105 வரையிலான பாகங்களில் குறிப்பிட்டுள்ளேன். இறைவனின் குழந்தைகளாகின்ற மனிதர்கள் பூமியில் வந்து பிறந்தால், அவர்கள் எவ்வித பிரச்சனையிலும் ஒட்டாமலிருக்கவேண்டும் என்றும் இறைவனின் விதிப்படி வாழவேண்டும் என்றும் கூறியுள்ளார். இறைவனின் விதிப்படி வாழ்வதுதான் விவேகம். விவேகத்துடன் வாழ்ந் தால் எந்தத் தவறும் இழைக்கமாட்டான். மாறான வாழ்விற்கு தன்னை மாற்றிக் கொண்டால் பிரச்சனைகளை அவன் எதிர்கொள்ளத் தயாராக வேண்டும். மனதை செம்மைப்படுத்தி வாழ வேண்டும்.

இந்தக் கட்டுரைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு காரணங்களுக்கும் தகுந்தார்போலுள்ள பரிகாரங்களை அவர் அருளியுள்ளார். குருதேவர் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தர் கூறியுள்ளார், "படைப்பில் மிக மோசமானவற்றுள் ஒன்று இப்பூவுலகம், அப்படிப்பட்ட பூவுலகில் மனிதனைப் படைத்து அனுப்பியுள்ளான் இறைவன். குருதேவருக்கு மனித வர்க்கத்தின்மேல் மிகுந்த கருணையும் பரிவும் உள்ளதால்தான் துன்பங்களுக்கான காரணத்தையும் பரிகாரத்தையும் அருளியுள்ளார். இறை தொடர்புதான் இறுதியான பாதுகாப்பு என்கிறார். மனிதனையும் படைத்து அவனுக்குள் ஆசையையும் படைத்து இந்த பகிட்டான பூபுலகிற்கு அனுப்பி வைத்துக்கொண்டிருக்கிறான் இறைவன். அது இறைவனுடைய பொழுதுபோக்கு என்கிறார் குருதேவர். அந்த ஆசைகள்தான் எல்லா துன்பங்களுக்கும் காரணம். இன்றைய உலகத்தின் நிலைமை மாற வேண்டுமென்றால் குருதேவர் அருளியுள்ள பரிகாரங்களைக் கையாண்டு விவேகத்துடன் வாழ வேண்டும். அதனால் மனிதன் பிரச்சனைகளில் அகப்படாமல் தப்பித்துக்கொள்ளலாம். தப்பிப்பது, எப்படியெனில் தியானத்தால் இறை தொடர்பு ஏற்படுத்தி இறைவனுடன் வாழுவதே பாதுகாப்பாகும். உலகப்பொருட்களில் மயங்காமலிருக்கவேண்டும். அவையெல்லாம் மாயையே! எப்பொழுதும் இறைவனைச் சார்ந்திருக்கவேண்டும். அவன் மேல் விசுவாசத்தையும் நம்பிக்கையையும் வளர்த்துக் கொள்ள வேண்டும். இறைவனாகின்ற சமுத்திரத்தில் நம் மனமெனும் நங்கூரத்தை இடவேண்டும்.

குருதேவர் அருளியுள்ள இன்றைய உலகத்தின் பேரழிவுகளுக்கும் பிரச்சனைகளுக்கும் உள்ள காரணங்கள் மற்றும் பரிகாரங்களின் தலைப்பைப் பார்க்கும்போது அவை ஓர் ஆறுதலாக இருக்கிறதை உணர முடிகிறது. இனிவரும் காலத்தில் எப்படி வாழவேண்டும் என்ற கேள்விக்கு, தீமைக்கு வாய்ப்பில்லாதவாறு 'இப்படித்தான் வாழ வேண்டும்' (குருதேவரின் அறிவுரைப்படி) என்று முடிவெடுப்பதற்கு மனம் உறுதியாகிவிடும். குருதேவருடைய போதனைகள் அனைத்தும் நம் பிரச்சனைகளைத் தீர்க்க வல்லதாக உள்ளன.

மேலும் ஒரு கருத்தைக் கூற விழைகின்றேன். இறைபக்தனான ப்ரஹலாதனுக்கு, அவன் தந்தை இரண்ணியன் எண்ணற்ற கொடுமைகள் செய்ததால், இறைவனே நேரடியாக நரசிம்மாவதாரம் எடுத்துவந்து இரண்ணியனைக் கொன்று ப்ரஹலாதனைக் காப்பாற்றினான். இரணியனைக் கொன்றபிறகும்கூட நரசிம்மனின் ஆக்ரோஷம் அடங்கவில்லை. யாருமே நரசிம்மனின் அருகில் செல்ல பயந்தனர். இறுதியில் ப்ரஹலாதனே அருகில் சென்று சமாதானப்படுத்திய பின்னர்தான் நரசிம்மனின் கோபம் அடங்கியது. அதே போன்று இன்றைக்கு மனிதர்கள் செய்கின்ற அநீதிகளால் பிரபஞ்ச சக்திகள் அனைத்தும் மிகுந்த கோபத்துடன் உள்ளன. அதனால் மேலும் அழிவுகள் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இறைவனை அறிந்துணர்ந்த குருதேவர் போன்ற பெரிய மகான்கள் யாராவது வந்தால்தான் இறைவனின் தூதர்களாகிய பஞ்சபூதங்களை அல்லது பிரபஞ் ச சக்திகளை சமாதானம் செய்து உலகத்தில் நிகழுகின்ற பேரழிவுகளையும் பிரச்சனைகளையும் தீர்க்கமுடியும். அதற்கு இறைவன்தான் மனம் கனிய வேண்டும்! அதற்காக அவனிடத்தில் நாம் அனைவரும் ஒன்று சேர்ந்து பிரார்த்திப்போமாக!!

மீண்டும் மலரும்...

குருப்ரியா (வசுமதி) சர்பதிவாளர் (ஓய்வு)
Cell No.9894595909




# நான்கு வழி சாலையை மாற்றி அமைக்க வைத்த முனிஸ்வரர்

## ஆலமரத்தில் குடியிருந்து பயணிகளை காக்கும் அற்புதம்

மதுரை–ராமேசுவரம் நான்கு வழி சாலையில், மானாமதுரை நகர் எல்லை பகுதியில் தர்ம முனிஸ்வரர் ஆலயம் ஒரு ஆலமரத்தடியில் பல வருடங்களாக உள்ளது. இப் பகுதி மக்கள் மிகுந்த பக்தியுடன் வழிபாடு செய்து வருகின்றனர்.

சூலம் ஆயுதம் வடிவில் ஆலமரத்தடியில் உள்ள இறைவனை பக்தர்கள், வாகன ஓட்டுனர் கள், வியாபாரிகள் என்று பல்வேறுதரப்பினரும் வழிபடுவது வழக்கம்.

இதுதவிர கர்ப்பிணி பெண்களும் தங்க ளுடைய குழந்தைகள் ஆரோக்கியமாகவும் பிறக்கவேண்டும் என வேண்டிக் கொள்கின்றனர். குழந்தைகள் பிறந்த பின் முதலில் இங்கு வழிபாடு செய்தபின் வேறு கோவில்கள் செல்லும் வழக்கம் உள்ளது.


அழகுராஜா

புதிய வாகனங்கள் வாங்குவோர் இந்த ஆலமரத்து முனிஸ்வரரை வணங்கி அர்ச்சனை செய்துவிட்டு செல்கின்றனர். இதனால் வாகன விபத்துகள் போன்றவைகளிலிருந்து முனிஸ்வர் காப்பதாக கூறப்படுகிறது.

தற்போது நாடு முழுவதும் நான்குவழி சாலை பணிகள் முடிக்க பட்டு, போக்குவரத்து நடந்து வருகிறது. கடந்த சிலஆண்டுகளுக்கு முன்பு மதுரை ராமேசுவரம் நான்கு வழி சாலை அமைக்க முடிவு செய்யப்பட்டது.

அவ்வாறு சாலையின் வரைபடத்தின் படி தர்மமுனிஸ்வரர் வழிபாடு நடைபெரும் ஆலமரத்தை அகற்ற முடிவு செய்து, ஜேசிபி மற்றும் கிரேன்கள் உதவிடன் பலமுறை முயற்சி செய்தனர்.

ஆனால் அந்த முயற்சி மிகப்பெரிய தோல்வியிலேயே முடிந்தது.

மரத்தைத் அகற்றமுடியாமல் தொடர்ச்சியாக வாகனங்கள் பழுதுஅடைந்த வண்ணமாய் இருந்தது.

கடைசியில் இந்த முனஸ்வரரின் சக்தியை அறிந்து, மரத்தை அகற்றும் முடிவை கைவிட்டு, புதியதாக மரத்தின் இரு பகுதியில் ரோடு அமையும்படி வரைபடம் தயார் செய்து நான்கு வழி ரோட்டை அமைத்தனர்.

தற்போது மரம் செழித்து வளர்ந்து வருகிறது.

இந்தியாவிலேயே நான்கு வழி சாலையில் அகற்ற முடியாத ஆலமரம் வழிபாடு தலமாக இந்த முனிஸ்வரர் ஆலயம் உள்ளது.

மானாமதுரையில் உள்ளது. ராமேசுவரம் சாலையில் செல்லும் சுற்றுலா பயணிகள் இங்கு இறங்கி,







இந்த அற்புத முனிஸ்வரர் குடியிருக்கும் ஆலமரத்தை வணங்கிவிட்டே செல்கின்றனர்.

ஒருசிலர் இங்கு வாகனங்களை நிறுத்தி முனிஸ்வரர் குடியிருக்கும் ஆலமரத்தடியில ஒய்வு எடுத்துக் கொண்டு பின் பயணத்தை தொடர்கின்றனர், இதனால் மனதிற்கு புத்துணர்ச்சி கிடைப்பதாகவும் பக்தர்கள் தெரிவிக்கின்றனர்.

– முதன்மை செய்தியாளர்
அழகுராஜா 9994162182

இதுவரை
வெளிவந்த
அனைத்து
இதழ்களையும்
எந்தவித
கட்டணமின்றி
முற்றிலும்
இலவசமாக
படிக்க
aanmeegamalar.com
இணையதளத்தை
பார்க்கவும்






















www.aanmeegamalar.com

# ராசி பலன்கள்

**01.05.2021 முதல்**
**15.05.2021 வரை**

ஜோதிடர் ஜெய் ஸ்ரீராம்
DME.,BA.,MA.,(ASTROLOGY)
மயிலாடுதுறை CELL
9487215736



## மேஷம் ராசி அன்பர்களே உங்களுக்கு

குடும்பத்தில் மகிழ்ச்சிகள் உண்டாகும். தொழிலில் இருந்த பிரச்சனைகள் விலகும். ஆரோக்கியத்தில் அதிக கவனம் தேவை. தேவையற்ற வாக்குவாதங்களை தவிர்த்து கொள்ளவும். குடும்ப ஒற்றுமை சிறப்பாக அமையும். வழக்குகள் முடிவுக்கு வரும். வெளியூர் பயணம் சென்று வருவதற்கான வாய்ப்புகள் கிடைக்கும். மனக்குழப்பம் தீரும். நீண்ட கால பிரச்சனைகள் ஒரு முடிவுக்கு வரும். வியாபாரத்தில் லாபம் அதிகரிக்கும். வரவேண்டிய பணம் வந்து சேரும்.

## ரிஷபம் ராசி அன்பர்களே உங்களுக்கு

பணம் கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை. பேச்சில் நிதானத்தை கடை பிடிக்கவும். தேய்வ அனுகூலம் உண்டு. குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். வேலையில் மாற்றம் உண்டாகும். பணிசுமை அதிகரிக்கும். மனைவி மூலம் ஆதாயம் அதிகரிக்கும். நீண்ட நாட்களாக வேலை கிடைக்காதவர்களுக்கு வேலை அமையும். புதியமுயற்சிகளில் அதிக கவனம் தேவை. உறவினர்களிடையே சுமூக உறவைகையாண் டாள் தேவையற்ற பிரச்சனைகளை தவிர்க்க லாம். காதல் விவகாரங்களில் அதிக கவனம் தேவை.

## மிதுனம் ராசி அன்பர்களே உங்களுக்கு

உங்களுடைய முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறக்கூடிய மாதமாக இந்தமாதம் அமையும். உங்களுடைய தேவைகள் அனைத் தும் பூர்த்தியாகும். வியாபாரத்தில் நல்ல முன் னேற்றம் உண்டாகும். போட்டிகள் குறையும். பெரிய முதலீடுகளில் அதிக கவணம் தேவை. கொடுத்த வாக்கினை காப்பாற்றுவீர்கள்.கூட்டு தொழிலில் அதிக கவணம் தேவை.உத்தி யோகத்தில் இருபவர்களுக்கு உத்தியோக உயர்வு உண்டு. பொருளாதாரம் நன்றாக இருக்கும். சொத்துக்கள் வாங்கும் அமைப்பு உண்டு. சொத்து சேர்க்கை உண்டாகும்.

## கடகம் ராசி அன்பர்களே உங்களுக்கு

உங்களுடைய கடன் பிரச்சனைகள் முடிவுக்கு வரும். பொருளாதார உயர்வு ஏற்படும். பண விஷயங்களில் அதிககவனம் தேவை. கௌரவமான சூழல் உண்டாகும். கணவன் மனைவியிடையே கருத்து வேறு பாடுகள் உண்டாகும். படித்து முடித்து வேலை தேடுபவர்களுக்கு வேலை கிடைக்கும். கொடுக் கல் வாங்கலில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். தந்தையின் உடல் நலனில் அக்கறை தேவை. தொழிலில் நல்ல முன்னேற்றம் உண்டாகும். வியாபாரத்தில் நல்ல லாபம் கிடைக்கும். தனவரவுகள் தனவரவுகள் அதிகரிக்கும்.

## சிம்மம் ராசி அன்பர்களே உங்களுக்கு

குடும்பத்தில் மகிழ்ச்சிகள் அதிகரிக்கும். சுப காரியங்கள் கைகூடும். கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை.வியாபாரத் தில் உள்ள எதிர்புகள் குறையும். பணவரவுகள் தாராளமாக இருக்கும். தொழிலில் எதிர்பார்த லாபம் உண்டாகும். உடல் ஆரோக்கியம் மேம்படும். உறவினர்களின் ஆதரவு மகிழ்ச்சியை தரும். உத்தியோகத்தில் இருபவர் களுக்கு உத்தியோக உயர்வு உண்டு. இதுவரை இருந்த பிரச்சனைகள் விலகும். கௌரவம் அந்தஸ்து அதிகரிக்கும். காதல் கைகூடும். வெளியூர் பயணங்களால் வெற்றி வாய்ப்புகள் அதிகரிக்கும்.

## கன்னி ராசி அன்பர்களே உங்களுக்கு

இதுவரை தொழிலில் இருந்த பிரச்சனை கள் விலகும். கொடுக்கல் வாங்கலில்அதிக கவனம் தேவை கூடுமானவரை தவிர்க்கவும். ஆடம்பர செலவுகளை குறைத்து கொள்ள வும். அனைத்து விஷயங்களிலும் நிதானத்

துடன் சிந்தித்து செயல்படுவது நல்லது. உத்தியோகத்தில் அதிக கவணம் செலுத்தவும். உயர் அதிகாரிகளின் பாராட்டை பெறுவீர்கள். வியாபாரத்தில் சற்று மந்த நிலை காணப்படும் சேமிப்புகளில் அதிக கவனம் செலுத்தவும் மனைவியின் உடல்நலனில் அக்கறை தேவை. கூட்டுதொழிலில் லாபம்அதிகரிக்கும். குடும்பத்தில் ஒற்றுமை குறைவு ஏற்படும்.

## துலாம் ராசி அன்பர்களே உங்களுக்கு

திருமண வயதில் உள்ளவர்களுக்குதிருமணம் கைகூடும். குழந்தைகளால்மகிழ்ச்சிகள் உண்டாகும். திடீர் பணவரவு ஏற்படும். மாணவர்கள் படிப்பில் அதிக கவனம்செலுத்த வேண்டும். குடும்பத்தில் சில குழப்பங்கள் உண்டாகும். பேசும் போது அதிக கவனத்துடன் பேச வேண்டும். ஆரோக்கியதில் அதிக கவனம் தேவை. மகிழ்ச்சிகள் அதிகரிக்கும். மனைவியிடம் கருத்து வேறுபாடுகளை குறைத்து கொள்வது நல்லது. ஆன்மீக எண்ணங்கள் அதிகரிக்கும். தொழிலில் அதிககவனம் தேவை. போட்டிகள் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களை மேற்கொள்வீர்கள். வேலைபளு அதிகாரிக்கும்.

## விருச்சிகம் ராசி அன்பர்களே உங்களுக்கு

திருமணம் கைகூடும் உங்களுடைய முயற்சிகள் வெற்றியை தேடி தரும். வாகன சேர்க்கை ஏற்படும். தாயார் உடல் நலனில் அதிக கவனம் தேவை. மாணவர்கள் படிப்பில் மந்த நிலை உண்டாகும். சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். தெய்வ அனுகூலம் உண்டாகும். தொழிலில் நல்ல லாபம் கிடைக்கும்.குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். சேமிப்புகள் அதிகரிக்கும்.முதலீடுகளில் அதிக கவனம் தேவை. உறவினர்கள் ஒன்று கூடி மகிழ்வீர்கள். சிவவழிபாடு நன்மையை தரும். எதிலும் கவனமுடன் செயல்படுவது நல்லது.

## தழுசு ராசி அன்பர்களே உங்களுக்கு

பொருளாதாரம் சீராக இருக்கும். ஆரோக்கியதில் அதிக கவனம் தேவை. குடும்பதில் எதிர்பாராத செலவுகள் உண்டாகும். யாருக்கும் வாக்குறுதிகள் தர வேண்டாம், கொடுக்கல் வாங்கலில் அதிக கவனம் தேவை, குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் உண்டாகும். சேமிப்பு அதிகரிக்கும். தந்தையின் சொத்துக்களால் ஆதாயம் உண்டாகும். போட்டிகளில் வெற்றி பெறுவீர்கள். காதல் கைகூடும். வீட்டில் சுப காரியங்கள் நடக்கும்.உங்களுடைய பேச்சுகளில் கவணம் தேவை. குல தெய்வ வழிபாடு நன்மையை தரும்.

## மகரம் ராசி அன்பர்களே உங்களுக்கு

உங்களுடைய முயற்சிகள் அனைத்தும் வெற்றி பெறும். புதிய வாய்ப்புகள் தேடிவரும். பணவரவு நன்றாக இருக்கும், சேமிப்பு அதிகரிக்கும். தந்தை வழி ஆதாயம் உண்டு. பணிசுமை குறையும் வெளியூர் பயணங்களை குறைத்து கொள்வது நல்லது. திருமண பேச்சுவார்தைகள் மகிழ்சியை தரும். தொழில்போட்டிகள் உண்டாகும். வாக்கு சாதுர்யம் அதிகரிக்கும். கௌரவம் அந்தஸ்து அதிகரிக்கும். ஆரோக்கியம் நன்றாக இருக்கும். அரசாங்க ஆதரவு உண்டு. சில பேருக்கு வீடு கட்டும் யோகம் உண்டு. வீட்டில் சுப நிகழ்ச்சிகள் நடைபெறும். தேவையற்ற பயணங்களை குறைத்து கொள்ளவும்.

## கும்பம் ராசி அன்பர்களே உங்களுக்கு

புதிய தொழில் வாய்ப்புகள் உண்டாகும். தொழிலில் லாபம் அதிகரிக்கும். சுபகாரியங்கள் கைகூடும். உத்தியோகத்தில் இருப்பவர்கள் தேவையற்ற பிரச்சனைகளில் தலையிட வேண்டாம். பணிகளில் மட்டும் கவனம் செலுத்தவும். கடன்கள் வசூலாகும். வியா பாரத்தில் உள்ளவர்களுக்கு போட்டிகள் குறையும். குழந்தைபாக்கியம் கிட்டும்.பணவரவுகள் சீராக இருக்கும். வீட்டில் மனைவியின் ஆதிக்கம் சற்று அதிகமாக இருக்கும். வாகனங்களில் செல்லும் போது அதிக கவனம் தேவை. செலவுகள் அதிகரிக்கும். குடும் பத்தில் விட்டுக்கொடுத்து போவது நல்லது. ஆரோக்கியத்தில் கவனம் தேவை.

## மீனம் ராசி அன்பர்களே உங்களுக்கு

குடும்பத்தில் மகிஷ்ச்சிகள் உண்டாகும்.சுப விரயங்கள் உண்டாகும். நட்பு வட்டாரம் அதிகரிக்கும். அரசாங்க ஆதரவு உண்டாகும். தொழிலில். இருந்த போட்டிகள் விலகும், சொத்துக்கள் சேர்க்கை உண்டாகும். பொருளாதார நிலை நன்றாக இருக்கும். உத்தியோக உயர்வு உண்டாகும். உங்களுடைய தேவைகள் அனைத்தும் பூர்தியாகும். கணவன் மனைவியிடையே விட்டுக்கொடுத்து போவது நல்லது. வெளியூர் வெளிமாநில தொடர்பால் நல்ல மாற்றம் உண்டாகும். திருமண முயற்சிகள் வெற்றியை தரும். லாபங்கள் அதிகரிக்கும். ஆரோக்கியம் சீராக இருக்கும்




# ஆங்கிலேயரை அசரவைத்த சிவன்

## கோபுரமின்றி வெட்டவெளியில் தண்டவாள ஓரத்தில் காட்சிதரும் எளிமை

இப்பூவுலகில் பரமன் இல்லாத இடம் எங்கே இருக்கு சொல்லுங்கள் பார்ப்போம், பரந்த லோகத்தில் பரமனுக்கு பலவிதமான எழில்மிகு தோற்றத்துடன் கூடிய ஆலயங்கள் உள்ளன.

வரலாற்று சிறப்புமிக்க ஆலயங்கள் இருந் தாலும் சில இடங்களில் சின்ன ஆலயத்தில் மிகச்சிறப்பு அடங்கியிருக்கும்,

அப்படி ஒரு சிறப்பு வாய்ந்த ஒரு ஆலயத்தைப் பற்றி பார்ப்போம்.

கடலூர் மாவட்டத்தில் சிதம்பரம் கிள்ளை ரயில் மார்க்கத்தில் உள்ளது கோவிலாம்பூண்டி கிராமம் இந்த கிராமத்தில் ரயில்வே இருப்புப் பாதை அருகிலேயே ஒரு சிறப்பு மிக்க ஆலயம் ஒன்று உள்ளது.

இந்த ஆலயத்தில் வீற்றிருக்கும் பரமனின் பெயர் "லிங்கேஸ்வரர் கோவில்" இங்கு இருக்கும் சிவலிங்கமும் வனதுர்க்கையும் இரண்டும் மிகப் பழமைவாய்ந்தது சிறப்பு வாய்ந்தது.

ஆலயம் மேற்கூரை கூட இல்லாமல் ஒரு ஆதிகால வேப்பமரத்தின் அடியில் திறந்த வெளியில். சதுர பீடத்தில் லிங்கேஸ்வரர் அவர் எதிரில் நந்தீஸ்வரர் இடதுபுறம் வனதுர்க்கை தரி சனம் செய்யலாம்.

இந்த ஆலயம் எப்போது அமைக்கப்பட்டது என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் எதுவும் இல்லை, நூற்றாண்டுகளுக்கு முன் முதன் முறை யாக தமிழ்நாட்டில் இருப்புப் பாதை அமைக்க ஆங்கிலேயர் ஆட்சியில் முடிவு செய்யப்பட்டது, அப்பொழுது வழித்தடம் அளவிடும் பணி நடை பெற்றது.

அப்பொழுது அங்கு ஒரு சிவலிங்கமும் வன துர்க்கையும் அவர்கள் அளவீடும்பணியில்குறுக்கே விளை நிலங்களுக்கு மத்தியில் இருந்தது.

இது இருப்புப்பாதை போடுவதற்கு இடையூறாக






இருப்பதாக கருதி அதை அப்புறப்படுத்தும் பணியில் ஆங்கிலேய அதிகாரிகள் ஈடுபட்டனர்.

இதைப்பார்த்த ஊர் மக்கள் மட்டுமல்ல சுற்றுப்புற கிராமக்களும் எங்கள் ஊரை காக்கும் மகேசன் அதனால் இவரை அப்புறப் படுத்த வேண்டாம் என்று எவ்வளவோ மன்றாடினார்கள்,

கடும் எதிர்ப்பு தெரிவித்தும் ஆங்கிலேய அதிகாரிகள் வலுக்கட்டாயமாக அந்த கோவிலை அப்புறப்படுத்த முயற்சி செய்தனர். ஆனாலும் அந்த அதிகாரிகளின் முயற்சி தடைப்பட்டது.

இங்கேதான் மகேசனின் மகிமை தாண்டவ மாடியது, முதலில் அவர்கள், சிவலிங்கத்தை தோண்டி எடுத்து அப்புறப்படுத்தும் பணியில் ஈடுபட்டனர், ஆனால் தோண்டத் தோண்ட சிவலிங்கத்தின் அடி தெரியவில்லை.

இதனால் மிகவும் அதிர்ச்சி அடைந்த ஆங்கிலேய அதிகாரிகள் இவ்வளவு ஆழம் பள்ளம் தோண்டி இதை அப்புறப்படுத்த முடியவில்லையே என்று வாயடைத்துப் போய் நின்றனர். தோண்டும் பணியை தற்காலிகமாக நிறுத்தி விட்டு சென்றனர்.

சில நாட்களுக்குப் பிறகு மீண்டும் லிங்கத்தை தோண்டி எடுக்கும் முயற்சிகள் தொடர்ந்தன ஒருநாள் அதை முன்னின்று நடத்திய ஆங்கிலேய அதிகாரியின் கனவில் வந்த மகேசன் நான் இங்கு இருக்கும் மக்களை காப்பவன் என்னை தொந்தரவு செய்ய வேண்டாம், என்று கூறி மறைய அந்த அதிகாரி இதில் ஏதோ ஒரு தெய்வீக சக்தி இருக்கிறது என்று முடிவு செய்து.

உயரதிகாரிகளுக்கு விபரம் கூறிவிட்டு, இந்த இடத்தை விட்டு அதன் பக்கத்திலேயே பாதை அமைக்க வேண்டும் என்று கூறினார், அவர்களும் சம்மதம் தெரிவித்தனர்.

அதிகாரிகள் உடனே அளவிடும் பணியை நிறுத்திவிட்டு இந்த கோவிலில் இருந்து சில அடிகள் தூரம் தள்ளி ரயில்வே இருப்புப் பாதைய அமைக்கத் தொடங்கினர்கள்.

இருப்புப் பாதைகள் பணிகள் முடிந்தவுடன் அந்த ஆங்கிலேய அதிகாரி வந்து மகேசனுக்கு அபிஷேகம் செய்து பூஜை செய்துவிட்டு தனது நன்றியை தெரிவித்து விட்டு சென்றதாக கூறுகிறார்கள்.

அதேபோல் இன்று வரை இந்த இருப்புப்பாதை காவல் தெய்வமாக இந்த கோவில் உள்ளது.

ரயில்வே ஊழியர்களின் காவல் தெய்வமாக மட்டுமல்ல சுற்றுப்புற கிராம மக்களின் காவல் தெய்வமாக இந்த கோவில் உள்ளது.

இங்கு அருள் பாலிக்கும் லிங்கேஸ்வரர் என்ற பெயர் இருந்தாலும் பக்தர்கள் இவரை லிங்கத்தடி கோவில் என்று அழைக்கிறார்கள்.

ஆண்டுதோறும் சித்திரை மாதம் சித்திரா பௌர்ணமி அன்று ரயில்வே ஊழியர்கள் அனைவரும் இணைந்து இங்கு வந்து சிறப்பு அபிஷேகங்கள் ஆராதனைகள் செய்யப்பட்டு ஏழு பானையில் பொங்கல் இட்டு மிக விமர்சையாக சித்ரா பௌர்ணமி விழாவை நன்றிக்கடனாக

செலுத்தி விட்டு செல்கின்றனர் . அதேபோல் இங்கு சுற்றுவட்டார கிராம மக்கள் அனைவரும் கோவிலுக்கு வந்து பொங்கல் வைத்து வழிபாடு நடத்தி வெகு விமர்சையாக கொண்டாடி வருகி றார்கள்.

இப்பகுதி உள்ள கிராம மக்கள் தினந்தோறும் இக்கோவிலுக்கு வந்து வணங்கி விட்டு செல் கின்றனர்.

அதிலும் பிரதோஷ தினங்களில் மாலை நேரத்தில் பிரதோஷ வேலையில் கிராம மக்கள் ஒன்றிணைந்து மிகச் சிறப்பாகஇங்கிருக்கும் நந்தீஸ்வரருக்கும் லிங்கேஸ்வரர், வனதுர்க்கைக் கும் பூஜை செய்கிறார்கள்.

இந்த கோவிலில் மனமுருகி வேண்டிக் கொண்டால் காவல் தெய்வமாக நமக்கு எந்த தீய சக்தியும் அண்டாமல் பார்த்துக்கொள்ளுவார் இந்த லிங்கத்தடியார் என்று மெய்யன்பர்கள் மெய்சிலிர்ப்போடு கூறுகின்றனர்.

அதேபோல் திருமணமாகாத ஆண்பெண் இருவரும் இங்கு பிரதோஷத்தன்று நெய்தீபம் ஏற்றி சிவபெருமானை புத்தாடை அணிவித்து வழிபாடு நடத்தினால் மிக மிக விரைவில்திருமணம் கைகூடும் என்பது பக்தர்களின் நம்பிக்கை.

அதேபோல் இங்கு இருக்கும் ஆதிவேப்ப மரத்திற்கு வெள்ளிக்கிழமை மஞ்சள் பூசி குங்குமம் வைத்து அதில் ஒரு திருமாங்கல்யக் கயிறு கட்டி வழிபட்டால் திருமண தடைகள் யாவும் உடைந்து திருமணம் விமர்சையாக மிக விரைவில் நடைபெறுவதாகவும் நம்பிக்கையோடு பக்தர்கள். கூறுகிறார்கள்.

சுற்றி இருக்கும் கிராமத்தில் இருக்கும் பொது மக்கள் வெளியூர் பயணங்கள் மேற்கொள்ளும் போது இந்த லிங்கத்தடி கோவிலுக்கு வந்து, நாங்கள் வெளியூர் செல்கிறோம் எங்கள்வீட்டையும் உடைமைகளையும் நீர் தான் காவல் தெய்வமாய் கற்கவேண்டும், என்று அந்த லிங்கத்தடயாரிடம் வீட்டின் சாவியை வைத்து வணங்கி எடுத் துச் செல்கின்றனர்,

அதேபோல் லிங்கத்தடியாரும் தங்கள் உடைமைகளையும் பாது காப்பதாக இப்பகுதி மக்கள் மிக நம்பிக்கை தெரிவிக்கின்றனர்.

இங்கே இருக்கும் வனதுர்க்கை மிக சக்திவாய்ந்தது குழந்தை பாக்கியம் இல்லாதவர்கள் இந்த வனதுர்க்கை அபிஷேகம் செய்து வெண்பொங்கல் படையலிட்டு அன்னதானம் செய்தால் மிக விரை வில் புத்திர பாக்கியம் கிடைத்து




இருப்பதாக பக்தர்கள் கூறுகின்றனர்.

பக்தர்களால் இங்கு ஒரு நந்தி சில ஆண்டுகளுக்கு முன் சிலை பிரதிஷ்டை செய்யப் பட்டுள்ளது.

மகேசனுக்கு பிரம்மாண்டமான கோவில்களை பார்த்திருப்பீர்கள் ஆனால் இங்கே மிக எளிமையாக சிறப்பு சக்திகள் வாய்ந்த இந்தப் பரமனை காண அவன் பாதம் பற்ற வாருங்கள் வாழ்க்கையில் எல்லா வளமும் கிடைக்க ஸ்ரீ லிங்கேஸ்வரர், வனதுர்க்கையையும் இருவரையும் வணங்கி அருள் பெற்றுச் செல்லுங்கள்.



பொ.பாலாஜிகணேஷ்

சிதம்பரம்,கோவிலாம்பூண்டி,மினி பேருந்தில் வந்து கோவிலாம்பூண்டி வந்து கோவிலுக்கு அரை கிலோ நடந்துதான் செல்ல வேண்டும்.

மேற்கொண்டு இந்த கோவிலுக்கு அர்ச்சகர்கள் யாரும் கிடையாது பக்தர்களே அபிஷேகம் செய்யலாம் ஆராதனை செய்யலாம் அலங்காரமும் செய்யலாம் எதற்குமே தடை கிடையாது.

– பொ.பாலாஜிகணேஷ்
சிதம்பரம், செல்:9842550844

# மனிதனது திறமை மனிதனுக்கே தேவைப்படுகிறது

இசை என்றாலே சேர்ந்துவிடு என்று பொருள். மகிழ்ச்சியான வாழ்க்கையில் கலைவாணி சேர்ந்தால் இசை தேன் தான். வாழ்வே இசைதான்.


❖❖❖

பேச்சு சிறப்படைய சரஸ்வதி தேவியை பக்தி செய். ஒரு பேச்சுக்கு, இவளைத் தொழுதால் மூச்சுக்கு மூச்சு, உன் பேச்சு பெரிய சொற்பொழிவு ஆகும்.

❖❖❖

உலகம், வாழ்க்கை, அதன் இயக்கம் இவையனைத்தும் ஒரு நாடகம் தான். புத்தி மான்களே இந்த நாடகத்தை இயக்குகின்றனர்.

❖❖❖



சரஸ்வதி தேவிக்கு உனது பஞ்ச இந்திரியங்களையும், மூளையையும் கொடு. உனது வாழ்க்கை நாடகத்தை உடனே நீ பார்க்கலாம்.

❖❖❖

சான்றோர்களைப் பணிந்து பணிவைத் தெரிந்து கொள். பிறகே வெறி பிடித்த முன்னேற்றம் என்ற நினைவு வெற்றி உணர்வாக இருக்காது.

❖❖❖

வெற்றிக்குத் திருநாள் கொண்டாடும் நாளை மனிதன் பெறவேண்டும். தோல்வி அடையக் கூடாது. இதற்கே விஜயதசமியில் ஆயுதபூஜை.

❖❖❖

பாலைவனத்தில் ஒட்டகங்கள் பெரிதும் பயன்படுகின்றன.
உபயோகங்கள் கிடைக்காத இடத்தில் முழுக்க முழுக்கப்
பயன்படுபவனே மனிதன்.

❖❖❖

சலாம், சல்யூட், வணக்கம், நமஸ்காரம் என்றால் எல்லாமே ஒன்றுதான். நான் இறைவனைப் பலவிதமாய் எடுத்துச் சொல்வதன் காரணம் நீ உணருவதற்காகவே!

❖❖❖

அறியாமை எப்படி இருக்கும்? கேள்வி கேட்டவன் மூளை போன்று கறுப்பாய் இருக்கும். யோசி. புரியவில்லை என்றால்
அது உன் மூளை போன்று இருக்கும்.

❖❖❖

ஞானம் எப்படி இருக்கும்? நீ சாப்பிடுகிற சோறு போன்று வெள்ளையாய் இருக்கும். உணவு உண்டு வாழுகின்றவன் ஞானத்தைக் கொண்டு விடுவான்.

❖❖❖

மனிதனுக்குக் கால்கள் இரண்டு. அதுபோல் சிந்திக்க உன் புத்திக்கு வேகமுண்டு. இதை அறி.

❖❖❖

ஆண்டவன் உனது பக்தியைக் காண வருவதுண்டு. ஆனால் நீ பக்தனாய் வாழும் பொழுதே இது நடப்பது உண்டு.

❖❖❖

பேசச் சொல்லிக் கொடுத்தால் பச்சைக்கிளி பேசச் சொன்னதையே சொல்லும். பூஜை செய்து கொண்டே வந்தால் ஆண்டவன் நீ அருளச் சொன்னதை அனுக்கிரகம் செய்வான்.

❖❖❖

மனிதனின் புத்தி பசுமாடு போன்றது. சிந்தனை என்பதை அதைத் தட்டிக் கொடுப்பதாகும். இதுபோல் உனது புத்தி உனது முன்னேற்றத்திற்காக பால் கறக்குமே ஒழிய, வாழ்க்கையின் முட்டுக் கட்டையாகி உன்னை முட்ட வராது.

❖❖❖

லாடமில்லாத குதிரை நாட்டிற்குள் ஓட கஷ்டப்படும். சிந்தனை கலங்கியவன் வாழ்க்கையில் முன்னேறுவது கஷ்டம்.

❖❖❖

பக்தி பஞ்சர் ஆகிவிட்டால் வாழ்க்கையில் ஒன்றுமே செய்ய முடியாது. குருவின் கருணை இருந்தால் பஞ்சர் பக்தியை ஒட்டிவிடலாம். பயப்படாதே.

❖❖❖

நல்ல புத்தியுடன் இருந்தால் சிந்தனை செய்யலாம். சிந்தனைக்கு கெட்ட புத்தி உதவாது.

❖❖❖

பக்தி செய்ய மெழுகு போன்று உருகு. உடனே ஆண்டவன் வந்துவிடுவான்.

❖❖❖

விவசாய விளைச்சலைப் பெருக்க முடியும். எந்த மனிதனும் விளைச்சலைக் குறைக்க மாட்டான். மனிதன் மடையன் ஆக முடியுமா? முடியாது. இதுவே புத்தியின் பெருந்தன்மை.

❖❖❖

ரேடியோவின் குரலைப் பெரிதுபடுத்தவோ, குறைக்கவோ வழியுண்டு. அதேபோல் உனது சிந்தனையை அதிகப்படுத்த முடியுமா?! ஆண்டவனால் மட்டுமே இதைச் செய்ய முடியும்.

❖❖❖

ஞானச்சேரி ஞானிகள்

**பூஜ்ய ஸ்ரீசத்குரு சதாசிவ பிரும்மேந்திரரின்**

அருளுரையிலிருந்து தொகுத்தது மேலும் விபரங்களுக்கு

எஸ்.மகாதேவன், போன் 098410 28028




ஆசிரியர், வெளியீட்டாளர்

**N.P.சந்திரன் நடராஜன்**

செல்: 9444228203

♦♦♦

முதன்மை செய்தியாளர்:

அழகுராஜா

செல்: 9994162192

♦♦♦

துணை ஆசிரியர்கள்

ஷியாம்சுந்தர்,

சஞ்சனா, ஸ்ரீபதி, தன்ஷிகா

குருபிரியா செல்: 9894595909

புனிதவேல் செல்: 9841807572

♦♦♦

வடிவமைப்பு

பான்ராஜாகிராபிக்ஸ்

செல்: 9444228203

நிர்வாக அலுவலகம்

**aanmeegamalar.com**

நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024.



## ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புபவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்

**9444228203**




# வலது இடது புறம் நகர்ந்து செல்லும் பிள்ளையார்

# குழந்தைப்பேறு அருளும் கருவறை கணபதி....!

குன்றத்தூர் தலத்திற்குச் செல்வோர் முருகன் மலை அருகே கோயில் கொண்டிருக்கும் காத்யாயனி அம்மனைத் தரிசிப்போர் தேவியின் பீடத்தில் உள்ள கருவறை கணபதியைக் காண்பது அரிது. சித்திரை மாதத்தில் அம்மனது வலது மூலையில் இருப்பவர் ஒவ்வொரு மாதமும் நகர்ந்து பங்குனியில் இடது மூலைக்கு வந்து விடுவதாக ஐதீகம்.

கார்த்திகேயனுக்கு ஆயாக இருப்பதால் அவள் காத்யாயனி எனப்படுபவள் இத்தலத்தில் மூத்தவன் கணபதிக்குத் தாயாக விளங்குவதால் ஒரு தாயின் கருவறையில் உருவாகும் குழந்தை அங்குமிங்கும் உருண்டு செல்வது போல இந்த பாலகணபதியும் சுற்றுவதாக நம்பிக்கை. குழந்தைப்பேறு கிட்டாத பெண்கள் அடிக்கடி கருச்சிதைவுக்கு ஆளாகி வருந்தும் பெண்களும் சனி, ஞாயிறு, சதுர்த்தி நாட்களில் சென்று இரண்டு தேங்காய், மூவகைப் பழங்களுடன் அர்ச்சனை செய்து கருவறை கணபதிக்கு அபிஷேகம் செய்த அமிர்த நீரைப் பிரசாதமாகப் பெற்று அருந்தி வயிற்றில் இட்ட சந்தனம் பிரசாதமாகப் பெற வேண்டும்.

"தொந்தியில் இட்ட சந்தனம் முந்திப் பிள்ளைப்பேறு தரும் என்பது சொல்வாக்கு." முக்கியமாக கருவறை கணபதியை ஒவ்வொரு சனிக்கிழமை அன்று மட்டும் அம்பிகை பீடத்தின் நடுவில் எடுத்து வைத்து சிறப்பு அபிஷேகம் செய்வது வழக்கம். மேலும் இந்த சன்னதியில் உள்ள புத்ரதா ஆரூடச் சக்கரத்தைக் காண்பதும் சனிக்கிழமை அன்று மட்டுமே முடியும்.

அம்மனின் கருவறை இடது மூலைக்குச் சென்றவர் சித்திரை மாதத்தில் மீண்டும் வலது மூலைக்கு வந்து விடுவார் இந்த பாலகணபதி.

– கே.குமார சிவாச்சாரியார்.
திருமுடிவாக்கம். போன்: 9551184326.

# பசுவையும் மானையும் தன்னுடன் ஆட்கொண்ட நச்சாடை சிவபெருமான்

தமிழகத்தில் உள்ள பெரும்பாலான கோவில்கள் பல்வேறு புராண இதிகாச கதைகளுடன் பின்னப்பட்டிருக்கும், அந்த வகையில், திருநெல்வேலி மாவட்டத்தில் உள்ள பஞ்சபூதத் தலங்களான...

- சங்கரன்கோவில் ஆலயம் நிலத்திற்குரிய தலம்.
- தருகாபுரம் ஆலயம் நீர் தலம்.
- தென்மலை ஆலயம் காற்று தலம்.
- கரி வலம் வந்த நல்லூர் ஆலயம் அக்னி தலம்.
- திருக்கொழுந்தீஸ்வரர் ஆலயம் ஆகாயத் தலமாகவும் விளங்கு கிறது.

இத்தலம்,தேவ தானம் வனப்பகுதி யில்அமைந்திருக்கிறது.

சுமார் 2000 ஆண்டுகள் பழமையானகோயிலாக இந்த அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளிய ஸ்வாமி திருக்கோயில் இருக்கிறது. இக்கோயிலின் இறைவனான சிவபெருமான் மூலவர் மற்றும் உற்சவர் நச்சாடை தவிர்த்தருளிய ஸ்வாமி என்கிற பெயரில் அழைக்கப்படுகிறார். அம்பாள் தவம்பெற்றநாயகி என்கிற பெயரில் வணங்கப்படுகிறார்.

சிவராத்திரியன்று பல அடியார்கள் ஒன்று கூடி, இந்த பஞ்சபூத தலங்களுக்கும் நடந்தே சென்று வழிபாடு செய்வார்கள்.

ஆகாய தலமாக விளங்கும் தேவதானம் திருக்கொழுந்தீஸ்வரர் ஆலயத்தைப் பற்றி இங்கே விரிவாக பார்ப்போம்.

காட்டுப்பகுதியில் வசித்து வந்த கலைமான் ஒன்று, கொன்றைத்





www.aanmeegamalar.com

தழைகளை விருப்பமுடன் உண்ண ஆரம்பித்தது. அந்த தழைகளுக்கு நடுவில் சிவலிங்கம் ஒன்று இருப்பதை கலைமான் கண்டது.

அன்றிலிருந்து அந்த கலைமான் சிவ லிங்கத்தை வழிபட ஆரம்பித்தது, தினமும் அந்த சிவலிங்கத்தை வழிபடுவதை வழக்கமாகக் கொண்டிருந்தது.

அதேப்போன்று, அந்தக் காட்டில் மேய்ச்சலுக்காக வந்த பசுவும், அந்த சிவலிங்கத்தை கண்டு பக்தி பரவசத்தால் சிவலிங்கத்தின் மீது தன் பாலைச் சுரந்து அபிஷேகம் செய்து வணங்கியது.

கலைமான் சிவலிங்கத்தை வணங்குவது பசுவுக்கும், பசு சிவலிங்கத்தை வணங்குவது கலைமானுக்கும் தெரியாது, ஆனாலும், நீண்ட நாட்களாக இவ்விரு விலங்குகளும் சிவனை தொடர்ச்சியாக வழிபட்டவண்ணம் இருந்தது.

பசு தன் மடிப்பாலை சிவலிங்கத்தின் மீது அபிஷேகமழை பொழிந்ததும், அருகில் சாணம் இட்டுவிடும், பசு சென்றதும், கலைமான் சிவனை வழிபட வரும்போது, சிவனுக்கருகிலேயே சாணம் இருப்பதை கண்டு, கடும் கோபம் அடைந்தது.

இறைவன் இருக்கும் இடத்தை இவ்வாறு சிதைப்பது யார் என்று கண்டுபிடிப்பதற்காக சிவனுக்கு அருகில் மறைவிடத்தில் ஒளிந்து கொண்டு கண்காணிக்கத் துவங்கியது கலைமான்.

அப்போது அங்கு வந்த பசுவைக் கண்ட கலைமான், இறைவன் இருப்பிடம் அருகில் இப்படி அசுத்தம் செய்தது இந்த பசுதான் என்று அறிந்து கொண்டு, தன்னுடைய கொம்புகளால் பசுவைத் தாக்கியது.

பசுவும் எதிர் தாக்குதல் நடத்தியது. இரு விலங்குகளுக்கும் பயங்கரமாக சண்டை நடைபெற்றது.


மா.பாண்டியன்

அப்போது அவர்கள் இருவருக்கும் காட்சி கொடுத்த இறைவன், அவர்களை சமரசம் செய்து, இருவருக்கும் முக்தியை வழங்கினார்.

இதற்கிடையில், தினமும் பசுவின் மடிப்பால் குறைவதை அறிந்த அப்பசுவின் உரிமையாளர், சங்கரன் அந்த மாட்டை பின்தொடர்ந்து காட்டுப்பகுதிக்கு வந்த நேரத்தில், சிவபெருமான் அந்த இரு விலங்குகளையும் ஆட்கொண்ட சம்பவத்தை நேரில் கண்ணார கண்டு ஆனந்தம் அடைந்தான்.

இறைவன் முன்பு அமர்ந்தான். மற்ற பசுக்களில் இருந்து பாலை கறந்து இறைவனை நீராட்டினான். மலர் தூவினான். தான் கொண்டு வந்த கட்டுச் சோற்றை வைத்தும், பழங்கள், தேன், வாசனைச் சாந்து, குங்கிலியம் ஆகியவற்றைக் காணிக்கைப் பொருளாக வைத்தும் இறைவனை வணங்கினான். அவன் கண்ட காட்சியை ஊராரிடமும் கூறினான். ஊர் மக்களும் திரளாக வந்து இறைவனை வணங்கி நின்றார்கள்.

இதேப்போன்று இந்தப் பகுதியில், கொன்றை மரத்தின் கீழ் இறைவன் வீற்றிருப்பதால் அவருக்கு 'திருமலைக் கொழுந்தீசர்' எனப் பெயர் பெற்றார். இந்தப் பகுதியில் கருநெல்லி மரத்தடியில் தேவியும், கங்கையும் இறைவனைக் காணத் தவமிருந்தனர். இறைவன் அவர்களுக்கு காட்சி கொடுத்தார். இதனால் இங்குள்ள தேவிக்குத் 'தவம் பெற்ற நாயகி' என்ற பெயர் ஏற்பட்டது.

## மன்னனுக்கு அருளிய சிவன்

சிவபக்தியில் சிறந்தவராக விளங் கிய வீரபாகு பாண்டியனை போரில் வெல்ல முடியாத விக்கரமசோழன் தந்திரத்தால் வீரபாகு பாண்டியனை கொல்ல ஒரு சதித் திட்டம் தீட்டு கிறான்.





www.aanmeegamalar.com

வீரபாகுவுடன் நட்பு பாராட்ட விரும்புவதாகவும். அதற்கு அடையாளமாக, தனது சேவகனிடம் ஒரு ஆடையை கொடுத்தனுப்பினார், அந்த ஆடை முழுவதும் சதித்திட்டம் தீட்டி, அந்த ஆடையை அணிந்தால் அணிந்தவர் எரிந்து போகும் படியான ஒரு நச்சு ஆடையை நயவஞ்சகமாக தயாரித்து கொடுத்தனுப்பினார்.

வீரபாகு சோழன், தனது சிவபக்தியால் இந்த ஆபத்தை முன்னரே உணர்ந்துவிடுகிறான். அந்த நச்சு ஆடையை தான் அணிந்து கொள்ளாமல், சோழனின் சேவகனுக்கே அணிவித்தான். சிறிது நேரத்தில் உடல் பற்றியெறிந்து அந்த சேவகன் மாண்டான்.

இந்நிகழ்விற்கு பிறகு பாண்டியனை காப்பாற்றிய சிவபெருமானுக்கு நச்சாடை தவிர்த்தருளிய சுவாமி என்கிற பெயர் ஏற்பட்டது.

தனது பக்தனுக்கு தீங்கிழைக்க விக்கிரமசோழன் மீது, சிவனின் கோபக்கனல் பட்டதால், விக்கிரமசோழனுக்கு கண்பார்வை பறிபோனது. இதனால், தன் தவறை உணர்ந்து, வீரபாகு பாண்டியனிடம் மன்னிப்பு கேட்டு, இந்த தேவதான கோயிலில் வந்து வழிபட்ட போது ஒரு கண் பார்வை மட்டும் கிடைத்தது. மற்றொரு கண்பார்வையும் கிடைக்க இறைவனிடம் வேண்டிய போது இவ்வூருக்கருகில் மேலும் ஒரு கோயில் எழுப்பினால் மற்றொரு கண்பார்வையும் கிடைக்கும் என அசரீரி கூற, அருகிலிருக்கும் சேத்தூர் என்கிற ஊரில் விக்கரமசோழன் கோயில் எழுப்ப, அவனுக்கு மற்றொரு கண்பார்வையும் கிடைத்தது.

மன்னனுக்கு நச்சு ஆடையை முன்கூட்டியே உணர்த்தியதால் இச்சிவனுக்கு நச்சாடை சிவன் என்று பெயர் ஏற்பட்டது. இத்திருக்கோயிலின் சிறப்புகளைப் பார்ப்போம்.

பஞ்ச பூத சிவஸ்தலங்களான காஞ்சிபுரம், காள ஹஸ்தி, திருவானைக்காவல், சிதம்பரம், திருவண்ணாமலை ஆகிய தலங்களை ஒரே நாளில் தரிசிக்க முடியாது. ஆனால் இந்த கோயில் இருக்கும் பகுதிக்கு அருகாமையில் இருக்கும் சங்கரன்கோயில், தாருகாபுரம், கரிவலம்வந்தநல்லூர், தென்மலை, தேவதானம் ஆகிய பஞ்சபூத சிவன் கோயில்களை ஒரே நாளில் தரிசிக்க முடியும் என்பது சிறப்பு.

குழந்தை பேறில்லாத பெண்கள் தலைக்கு

ஊற்றி குளித்து விட்டு ஐந்தாவது நாளில் இக்கோயிலுக்கு தங்களின் கணவர்களோடு சென்று கோயில் வளாகத்தில் தல விருட்சமாக இருக்கும் நாகலிங்க மரத்தில் மூன்று நாகலிங்க பூக்களை பறித்து ஸ்வாமிக்கு அர்ச்சனை செய்து வழிபட வேண்டும். பின்னர் அந்த பூக்களை பிரசாதமாக பெற்று, மூன்று இரவு தம்பதிகள் பசும்பாலில் கலக்கி குடித்து வந்தால் விரைவிலேயே குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்பது இன்றும் நடைபெறு நிகழ்வாக நடந்துவருகிறது.

கண்களில் ஏற்படும் எத்தகைய நோய்கள் மற்றும் குறைபாடுகள் தீர இங்கு வந்து வழிபடுபவர்களுக்கு அது நீங்குகிறது. உடலில் காயங்கள் ஏற்பட்டு சிலருக்கு தழும்புகள் ஏற்பட்டு அவலட்சணமான தோற்றத்தை தருகிறது. இங்கு வந்து வழிபாடும் அத்தகைய தழும்புகள் நீங்குவதாக கூறப்படுகிறது.

தானே முளைத்த லிங்கம். மூர்த்தி சிறியதுதான் ஆனால் கீர்த்தி பெரியது. ஆகாயத்தலமான இந்த ஆலயத்தில் எம்பெருமான் அம்மையப்பராக, நச்சாடை தவிர்த்தருளிய இறைவனாக கருணையோடு நமக்கு அருள்பாலிக்கிறார். கோவிலை சுற்றி தட்சிணாமூர்த்தி, விஷ்ணு மகாலட்சுமி, பிரம்மா, சரஸ்வதி ஆகியோர் வீற்றிருக்கின்றனர். கன்னிமூல விநாயகர், வள்ளி தெய்வானை சமேத முருகன், சனீஸ்வரர், சண்டிகேஸ்வரர், பைரவர் உள்பட அனைத்து தெய்வங்களும் பிரமாண்டமாக உள்ளன.

எந்த கோவிலிலும் இல்லாத வகையில் இந்த ஆலயம் வெளிச்சுற்று பிரகாரத்தில் உயரமான இடத்தில் திருக்கொழுந்தீஸ்வரரும், அருகே கண்கொடுத்த சிவன், கண் எடுத்த சிவனும் உள்ளனர். அங்கிருந்து இறங்கினால் அம்மன் தவம் இருந்த இடம் காணப்படுகிறது. அடுத்ததாக கோவிலில் தல விருட்சமான திருக்கொன்றை மரமும் இருக்கிறது. அருகில் மரத் தடியில் அம்மன் தவகோலம் நமக்கு வேண்டும் வரம் தருவதாகவே காணப்படுகிறது.

கோயில் அமைவிடம்

அருள்மிகு நச்சாடை தவிர்த்தருளிய ஸ்வாமி திருக்கோயில் விருதுநகர் மாவட்டத்தில் ராஜபாளையம் வட்டத்திலிருக்கும் தேவதானம் என்கிற ஊரில் அமைந்துள்ளது.

மா.பாண்டியன்
தொடர்பு எண்: 9047479415

ஆன்மிகமலர்




ஆன்மிக விஷயங்களின் முழு வீடியோ
aanmeegamalar
YouTube
யூ-டியூப் சேனலில் பதிவிடப்பட்டுள்ளோம். நமது சேனலில் சென்று முழுவதுமாக பார்த்து பயன் பெறுங்கள்...

ஆன்மிக சேவை செய்யும் நமது சேனலை
Subscribe
like & share

# ஸ்ரீமத் பாகவத ரஹஸ்யம்

பகுதி–03

## சுயக்ஞன்

ருசி, ஆஹூதி தம்பதியருக்கு சுயக்ஞனாக அவதரித்து தேவதைகளை உருவாக்கினார். அவர்களுக்கு நேர்ந்த பல துன்பங்களை நீக்கி, அதனால் 'ஹரி' என்னும் திவ்ய நாமாவினால் அழைக்கப்படுகிறார். அபார கீர்த்தியுடனும், தேஜசுடனும் விளங்கினார். இந்த யுகத்தில் யோகஞான மார்கத்தால் ஈஸ்வரனை அடைவதை காட்டிலும், ஹரி கீர்த்தனத்தால் அவரை அடைவது மிகவும் சுலபமாகிறது. இது யக்ஞாவதாரம்.

## கபிலர்

தேவஹூதிகர்தமர் என்னும் தெய்வ தம்பதியருக்கு கபிலராக அவதாரம் புரிந்தார். தனது தாயான தேவஹூதிக்கு ப்ரஹ்மவித்தையை (ஸாங்க்ய யோகத்தை) உபதேசித்தருளினார். இது ஸ்ரீமத் பாகவதத்தில் மிகவும் சிறப்பாக பார்க்கப்படுகிறது. அதனால் அவள் முக்குண தோஷங்களிலிருந்து விடுபட்டு, பகவான் கபிலருடைய ஸ்வரூபத்திலே லயித்து முக்தி அடைந்தாள். அவ்விடம் 'ஸித்திபதம்' என்று அழைக்கப்படுகிறது.

## ஸ்ரீ தத்தாத்ரேயர்

சப்த ரிஷிகளில் மிக ச்ரேஷ்டரான அத்ரி மகரிஷிக்கும் பதிவ்ரதாசிரோன்மணியான அனுஸூயா மாதாவிற்கு மும்மூர்த்திகளின் அம்சமாக பிறந்தவர் ஸ்ரீ தத்தாத்ரேயர். அத்ரி அனுசுயா ஸத்புத்ரனை வேண்டி தவமிருக்க, அவர்களின் தவத்தில் மகிழ்ந்த இறைவன் 'நானே என்னை கொடுக்கிறேன்' என்ற வாக்கியத்தின்படி 'தத்தாத்ரேயராக' அவதரித்தார்.

குரு பரம்பரை என்பது ஸ்ரீ தத்தாத்ரேயரிடம் இருந்துதான் ஆரம்பம்.

ஸ்ரீமத் பாகவதத்தில் (117,8,9) யயாதியின் புதல்வரான யதுவிற்கும் ஓர் அவதூதர்க்கும் (ஸ்ரீ தத்தர்) நடக்கும் சம்பாஷணைகள் 'யது வாத சம்வாதம்' என்று அழைக்கப்படுகிறது. இவர் ஒரு நித்ய சிரஞ்சீவி.

தத்தரின் பாத தூளியிலிருந்து யதுவும், கார்த்தவீர்யார்ஜுனனும் தோன்றினார். ஸ்ரீ தத்தர் தனது யோகா மாயையால் 15 தத்வங்களாலான உலகை படைத்து தான் 16ஆவது தத்வமான புருஷனாக ஆனார்.

## குமராவதாரம்

ஸனத்குமார, ஸனக, ஸநந்தன, ஸனத்சுஜாத என்ற பெயருடன் நால்வராக தோன்றினார். அப்போது மகாப்ரளயத்தில் மறைந்து போன



www.aanmeegamalar.com



ஆத்மவித்தையை, மகரிஷிகளும் மீண்டும் உபதேசித்தருளினார். இது குமாரவதாரம்.

### ஸ்ரீ நரநாராயணர்

நரன் என்பது மனிதத் தன்மையையும். நாராயணன் என்பது தெய்வத் தன்மையையும் விளக்குவது. நர நாராயணன் என்பது மனிதனும் தெய்வமும் இணைந்த சக்தியைக் குறிப்பிடுவதாகும்.

மனுவிற்கு மூன்று பெண் குழந்தைகள்முறையே 'ஆஹூதி', 'தேவஹூதி' மற்றும் ' ப்ரஸூதி' பிறந்தனர். மனு ப்ரஸூதியை தக்ஷபிரஜாபதிக்கு மணம் முடித்து வைத்தார். தக்ஷப்ரஜாபதிக்கும், ப்ரஸூதிக்கும் 16 பெண் குழந்தைகள் பிறந்தனர். அவர்களில் தர்ம தேவன் 13 பெண்களையும், ஒருத்தியை அக்னி தேவருக்கும் , மற்றொருத்தியை பித்ருகணங்களுக்கும் கடைசி குழந்தையான சதியை சிவபெருமானுக்கும் மணம் முடித்து வைத்தார்.

தக்ஷ புத்ரியான மூர்த்தி என்பவளுக்கு நர நாராயண ஸ்வரூபியாக ஆவிர்பவித்தார். மன்மதன் நெருங்க முடியா அபார ப்ரஹ்மசர்ய தேஜஸ் நிரம்பிய பகவான் மஹா விஷ்ணுவின் பரம பவித்ரமான அவதாரம். இந்திரியங்களை ஜெயிப்பது எப்படி என்பதை எடுத்துக்காட்டும் ஓர் ஒப்பற்ற அவதாரமாக இது திகழ்கிறது. இவர்கள் முக்கிய பணி தவத்தின் பெருமையை உலகிற்கு எடுத்துரைப்பதும் தன் தவத்தின் மூலம் உலகை பரிபாலனம் செய்வதுமே ஆகும்.

### பிருகு சக்ரவர்த்தி

'வேனன்' என்னும் அரசன் பிராம்மண சாபத்தினால் சகல ஐஸ்வர்யங்களையும் இழந்து, கீழான கதியை அடைந்தபொழுது, ரிஷிகளின் வேண்டுகோளுக்கிணங்கி பகவான், அவனுடைய புத்திரனாக பிறந்து, அவனை நரகத்திலிருந்து விடுவித்து, பிருகு சக்ரவர்த்தியாக பூமா தேவியை பசுவாக செய்து, சகல வஸ்துக்களையும் கறந்து, லோக பரிபாலனம் செய்து ரக்ஷித்தார்.

### ரிஷபாவதாரம்

நாபி என்னும் மன்னனுக்கு ரிஷப தேவராக பிறந்து, முற்றும் துறந்த முனிவராக வாழ்ந்து, புலன்களையும், மனதையும் சாந்த நிலையில் வைத்து, ஆத்மஸ்வரூபத்திலே ஆழ்ந்து, மூடனைப்போல சஞ்சரித்தார். இந்திரனால் அளிக்கப்பட்ட 'ஜயந்தி' என்பவளை மனம் புரிந்து கொண்ட, கிரஹஸ்த தர்மங்களை நன்றாக அனுஷ்டித்த அவர்களுக்கு 100 புத்திரர்கள் பிறந்தார்கள். அவர்களில் மூத்த குமாரன் 'பரதன்' மிக்க குணசாலியாகவும், மகாயோகியாகவும் விளங்கினார். அந்த பரதனுடைய அரசாட்சி காலத்திலேதான், இந்நாட்டிற்கு 'பாரததேசம்' என பெயர் உண்டாயிற்று.

### ஹயக்ரீவதாரம்

சகலகலைகளுக்கும் அதிபதியான சரஸ்வதியின் குரு. அகஸ்திய மகரிஷிக்கு ஸ்ரீலலிதா சஹஸ்ரநாமம் உபதேசித்து லோகத்தில் பரவச்செய்தார். பொன்னிற தேகத்துடன், யக்ஞஸ்வரூபியாக விளங்கியவர். இவருடைய மூச்சு காற்றிலிருந்துதான் சகல வேதங்களும் தோன்றின. ஞான ரூபி. மது, கைடபர் என்னும் அசுரர்களை அழித்து வேதங்களை மீட்டவர்.

### தன்வந்திரி

பாற்கடலிலிருந்து உதித்தவர். கரங்களில் அமிர்த கலசத்துடன் விளங்கி மக்களின் தீராத ரோகங்களையும், நோய்களையும் நிவர்த்தி செய்து, ஆயுர்வேதமென்ற வைத்ய சாஸ்திரத்தை உலகத்தில் பரவ செய்தவர்.

– மதுரை சு. ரகுராமன்
தொடர்பு எண்: 9940349593

# அக்ஷய த்ரிதீயை

ஸத்ய யுகம் முடிந்து த்ரேதா யுகம் ஆரம்பமாகும் தினமே அக்ஷய த்ரிதீயை ஆகும். அக்ஷய த்ரிதீயையின் முக்கியத்துவம், அதைக் கொண்டாடும் வழிமுறை, இந்த சுப தினத்தில் செய்யப்படும் எள் தர்ப்பணம் மற்றும் நீர்க்கலச தானத்தின் சிறப்பு மற்றும் இது போன்ற மேலும் பல சிறப்பு விஷயங்களை இந்த விரிவானகட்டுரை வாயிலாகத் தெரிந்து கொள்ளப் போகிறோம்.

சாதாரண காலத்தில் அதாவது எல்லாசெயல்களையும் மேற்கொள்வதற்கு ஸாதகமான சூழ்நிலை இருக்கும்போது தர்மம் கூறியுள்ளபடி ஆன்மீக சாஸ்திரத்தைப் பின்பற்ற வேண்டும்.

பாதகமான சூழ்நிலையிலும் ஆபத்துக் காலத்திலும் எவ்வாறு தர்மத்தைப் பின்பற்றுவது என்று ஹிந்து தர்மம் வழிகாட்டியுள்ளது. அதுவே ஆபத் தர்மம். ஆபத்தர்மம் 'ஆபதி கர்தவ்யோ தர்ம:' என்பதிலிருந்து வந்துள்ளது. இதன் அர்த்தம் பாதகமான சூழ்நிலையில் பின்பற்ற வேண்டிய தர்மம் என்பது. தற்பொழுது முழு நாடும் மறுபடியும் கோவிட் விஷாணு பரவலால் பொதுமுடக்க நிலையை எதிர்கொள்ள வேண்டியுள்ளது.

இந் நிலையில் தர்மம் கூறியுள்ளபடி அக்ஷய த்ரிதீயை பண்டிகையை கொண்டாடுவது கடினம். இந்த கட்டுரையில் இந்நிலையிலும் நாம் செய்யக் கூடிய காரியங்களைப் பற்றிய விவரங்கள் உள்ளன.

இதிலிருந்து எந்த ஒரு நிகழ்வையும் எதிர் கொள்ளும் ஹிந்து தர்மத்தின் தயார்நிலை தெரிகிறது. இதுவே ஹிந்து தர்மத்தின் தனித்துவமும் ஆகும்.



### பண்டிகையின் திதி

வைகாசி மாத சுக்ல த்ரிதீயை அக்ஷய த்ரிதீயை ஆகும். இந்த நாள் பண்டிகையாகவும் விரத மாகவும் கொண்டாடப்படுகிறது. அக்ஷயத்ரிதீயை சம்பந்தமான பல முக்கிய அம்சங்கள் உள்ளன.

### நிரந்தர பயன்களை வழங்கும் நாள்

புராதன சம்ஸ்க்ருத க்ரந்தமான மதனரத் னாவில் பகவான் ஸ்ரீகிருஷ்ணன் இந்நாளின் முக்கியத்துவத்தை யுதிஷ்டிரனுக்கு எடுத்துரைப்பதாக வருகிறது. அவர் கூறுகிறார்,

அஸ்யாம் திதௌ க்ஷயமுற்பதி
ஹுதம் ந தத்தம் |
தேனாக்ஷயேதி கதிதா முநிபிஸ்த்ருதீயா||
உத்திஷ்ய தைவதபித்ருநிக்ரயதே மனுஷ்யை: |
தத் ச அக்ஷயம் பவதி
பாரத ஸர்வமேவ || மதனரத்னா

**அர்த்தம்:**

(ஸ்ரீகிருஷ்ணன் கூறுகிறார்) ஹே யுதிஷ்டிரா, இந்நாளில் செய்யப்படும் தானமும் யக்ஞத்தில் செய்யப்படும் ஆஹுதிகளும் எப்போதும் வீணாகாது. அதனால் ரிஷிகள் இதற்கு அக்ஷய த்ரிதீயை என பெயர் சூட்டியுள்ளனர். தெய்வங்களுக்காகவும் மூதாதையர்களுக்காகவும் இந்நாளில் செய்யப்படும் எல்லாமே அக்ஷயமாக இருக்கும் அதாவது அழிவில்லாமல் இருக்கும்.

### ஸத்ய யுக முடிவையும் த்ரேதா யுக ஆரம்பத்தையும் குறிக்கும் நாள்

காலப்போக்கில் ஒவ்வொரு யுகத்திலும் ஸாத் வீகத் தன்மை குறைந்து கொண்டே வருகிறது, அதாவது ரஜதம தன்மை அதிகரித்துக் கொண்டே போகிறது. ஆன்மீக பயிற்சி புரியும் திறன் மனிதர்களிடம் குறைகிறது மற்றும் அவர்கள் தர்மத்தை விட்டு விலகி செல்கின்றனர்.

இது தர்ம அழிவை ஏற்படுத்துகிறது. இந் நிலையில் இறைவன் தர்மத்தை மறுபடியும் நிலை நாட்ட அவதாரம் எடுத்து வருகிறார். அதோடு மனிதர்கள் பின்பற்றுவதற்கு ஏற்ற ஆன்மீக பயிற்சியை உருவாக்குகிறார். இதன் மூலம் ஸாத்வீகத் தன்மை அதிகரிக்கிறது, அடுத்த யுகத்தின் ஸத்ய யுகம் ஆரம்பமாகிறது.

இந்த இடைப்பட்ட காலத்தை சூன்ய காலம் அல்லது கலஹ காலம் என்று அழைப்பர். ஹிந்து கிரந்தங்களின்படி ஒரு யுகம் முடிந்து மறு யுகம் ஆரம்பிக்கும் தினம் மிகவும் முக்கியமானதாகும்.

இது ஒரு யுகத்தின் கலஹ கால முடிவையும் அடுத்த யுகத்தின் ஸத்ய யுக ஆரம்பத்தையும் குறிக்கிறது. இக்காலம் அதாவது இந்த முஹூர்த்தம் சில க்ஷணங்களே நீடிக்கின்றன; ஆனால் இதன் தாக்கம் அடுத்த 24 மணி நேரம் உள்ளது. அதனால் அன்றைய தினம் முழுவதுமே முஹூர்த்த நாளாக கருதப்படுகிறது.

### அவதாரங்கள் வெளிப்படும் நாள்

அக்ஷய த்ரிதீயை அன்று பகவானின் அவதாரங்களான ஹயக்ரீவர், பரசுராமர் மற்றும் நரநாராயணர்கள் வெளிப்பட்டார்கள்.

### மூன்றரை மூஹூர்த்தங்களில் ஒன்று

அக்ஷய த்ரிதீயை மூன்றரை மூஹூர்த்தங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இந்த மூன்றரை முஹூர்த்தங்கள் சித்திரை வருடப்பிறப்பு, விஜய தசமி மற்றும் அக்ஷய த்ரிதீயை. இவை மூன்று முஹூர்த்தங்கள் ஆகும் பலி ப்ரதிபதா அரை முஹூர்த்தமாக கருதப்படுகிறது.

### ஸாத்வீகத் தன்மை அதிகரித்தல்

அக்ஷய த்ரிதீயை அன்று பிரம்மா மற்றும் ஸ்ரீவிஷ்ணு தத்துவங்கள் ஒருங்கிணைந்து பூமியை வந்தடைகின்றன. இது பூமியின் ஸாத்வீகத் தன்மையை 10% அதிகரிக்கிறது. இதுவரை நாம் அக்ஷய த்ரிதீயை சம்பந்தமான பல்வேறு சிறப்புகளைப் பார்த்தோம்.

### பண்டிகையை கொண்டாடும் விதம்

எந்த ஒரு காலக்கட்டத்தின் முதல் நாளையும் பாரதீய மக்கள் மங்களகரமானதாக கருதுவதால் ஆன்மீக கிரந்தங்கள் இந்நாட்களில் ஸ்நானம், தானம் போன்ற சடங்குகளை விதித்துள்ளது. இந்நாளில் புனித நீரில் நீராடல், ஸ்ரீவிஷ்ணுவின் பூஜை, நாமஜபம், ஹோமம், தானம் மற்றும் பித்ரு தர்ப்பணம் ஆகியவை செய்யப்படுகின்றன.

இந்நாளில் மூதாதையர்களுக்காக பிண்ட ச்ரார்த்தம் செய்வது நல்லது. அது முடியாத பட்சத்தில் எள் தர்ப்பணமாவது செய்யவேண்டும்.தகுதியுள்ளவருக்கே தானம் அளிக்க வேண்டும்.

தர்மபிரசாரத்தில் ஈடுபடும் ஆன்மீகஸ்தாபனங்கள் மற்றும் மகான்கள் ஆகியோரேதானம் பெறுவதற்கு தகுதியானவர்கள். தகுதியானவர்களுக்கு தானம் அளிக்கும்போது அது அகர்மகர்மாவாகிறது.

அதாவது அக்கர்மாவால் எந்த கொடுக்கல் வாங்கல் கணக்கும் ஏற்படுவதில்லை. தானமளிப்பவர் எந்த பற்றுதலிலும் மாட்டிக் கொள்ளாததால் அவரின் ஆன்மீக முன்னேற்றமும் நடைபெறுகிறது.

### எள் தர்ப்பணத்தின் நோக்கம்

எள் தர்ப்பணம் என்பது தெய்வங்களுக்கும் மூதாதையர்களுக்கும் எள்ளையும் தண்ணீரையும் அளிப்பதாகும். அதாவது அவர்களை சந்தோஷப்படுத்த வலக்கை பெருவிரல் வழியாக தண்ணீரை விடுவது ஆகும். மூதாதையர்களுக்கு இவ்வாறு அளிக்கப்படும் தண்ணீர் பித்ரு தர்ப்பணம் என அழைக்கப்படுகிறது. மூதாதையர்கள் தங்கள் வம்சத்தினரிடமிருந்து பிண்டத்தையும் பிராம்மண போஜனத்தையும் எதிர்பார்க்கின்றனர்; அதேபோல் தண்ணீரையும் எதிர்பார்க்கின்றனர். தர்ப்பணம் செய்வதால் பித்ருக்கள் மகிழ்ச்சி அடைகின்றனர். எள் ஸாத்வீகத் தன்மையையும் தண்ணீர் சுத்த ஆன்மீக உணர்வையும் குறிக்கிறது.


www.aanmeegamalar.com

தெய்வங்களுக்கு வெள்ளை எள்ளும் பித்ருக்களுக்கு கருப்பு எள்ளும் அளிக்கப்படுகிறது. கருப்பு எள் ரஜ/தம அதிர்வலைகளை வெளிப்படுத்துகிறது. இவற்றின் உதவியுடன் அதிருப்தி அடைந்த மூதாதையர்களால் பூமியில் அந்த சடங்கு நடக்கும் இடத்திற்கு வர முடிகிறது. இந்த சடங்கில் அர்ப்பணிப்பதைப் பெற்று அவர்கள் திருப்தி அடைகிறார்கள்.

### எள் தர்ப்பணம் செய்யும் வழிமுறை

தெய்வங்களுக்கு எள் தர்ப்பணம் செய்யும் போது உள்ளங்கையின் நிலை

அ. முதலில் ஒரு வட்ட தாமிரத் தட்டை கையில் ஏந்த வேண்டும்.

ஆ. பிரம்மா, ஸ்ரீவிஷ்ணு மற்றும் அவர்களின் ஒருங்கிணைந்த ரூபமான ஸ்ரீ தத்தாத்ரேயரை ஸ்மரித்து அவர்களிடம் அந்த தட்டில் ஆவாஹனம் ஆகும்படி பிரார்த்தனை செய்ய வேண்டும்.

இ. தெய்வங்கள் சூட்சும ரூபத்தில் அந்த தாமிரத் தட்டில் ஆவாஹனம் ஆகி உள்ளனர் என்ற ஆன்மீக உணர்வைக் கொள்ள வேண்டும்.

ஈ. வெள்ளை எள்ளை எடுத்துக்கொண்டு அதை தெய்வங்களுக்கு அர்ப்பணிக்கிறோம் என்ற ஆன்மீக உணர்வுடன் அவற்றின் மேல் தண்ணீர் ஊற்றி உள்ளங்கையிலிருந்து தாமிரத் தட்டில் விழுமாறு செய்ய வேண்டும்.

உ. கைகளைக் கூப்பி தெய்வங்களிடம் பிரார்த்தனை செய்ய வேண்டும்.

இதுவே தெய்வங்களுக்கு எள் தர்ப்பணம் செய்யும் வழிமுறை. தெய்வங்களுக்கு எள்ளையும் தண்ணீரையும் ஆன்மீக உணர்வுபூர்வமாக வழங்கும்போது, அந்த தெய்வங்களின் ஸாத்வீகத் தன்மையை அதிக அளவு அவரால் க்ரஹிக்க முடியும்.

### முக்கியத்துவம்

இன்றைய தினத்தில் உயர் லோகங்களிலிருந்து அதிக அளவு ஸாத்வீகத் தன்மை பூமியை அடைகிறது. புவர்லோகத்திலிருந்து பல ஜீவன்கள் இந்த ஸாத்வீகத் தன்மையை க்ரஹித்துக் கொள்ள பூமிக்கு அருகில் வருகின்றனர். இதனால் மனிதர்களுக்கு கஷ்டங்கள் ஏற்படும் வாய்ப்பு அதிகம். அதிருப்தி அடைந்த மூதாதையர்களால் ஏற்படும் கஷ்டங்கள் 30 முதல் 40% வரை இருக்கும். இந்த ஜீவன்கள் பூமிக்கு அருகில் வருவதால் அவர்களுக்கு எள் தர்ப்பணம் மூலமாக சக்தி கிடைக்கிறது; மேற்கொண்டு செல்லக்கூடிய கதியும் கிடைக்கிறது.

### தானத்தின் முக்கியத்துவம்

இன்றைய தினம் செய்யப்படும் தானம் நீடிக்கிறது. அக்ஷய த்ரிதீயை அன்று நல்ல தானியங்கள், நீர்க்கலசம், வெட்டிவேர் விசிறி, குடை, செருப்பு போன்றவற்றை மூதாதையர்களுக்காக தானம் செய்ய வேண்டும் என்று புராணங்கள் கூறுகின்றன.

### நீர்க்கலசம் தானம் அளித்தல்

அக்ஷய த்ரிதீயையில் செய்யப்படும் தானம் என்றும் குறைவதில்லை. மகான்களுக்கும் சத்காரியத்திற்கும் செய்யப்படும் தானம் அதிக மகத்துவம் வாய்ந்தது. இத்தகைய தானம் செய்பவர் இறந்த பின் உயர்ந்த லோகங்களுக்கு செல்வர்.

தெய்வம் மற்றும் பித்ருக்களுக்கு எள்ளும் தண்ணீரும் அர்ப்பணம் செய்வதால் அவர்கள் திருப்தியடைந்து அவர்களின் ஆசீர்வாதம் கிடைக்கிறது.

### தானம் செய்வதன் நோக்கம்

நீர்க்கலசம் எல்லாவற்றையும் உள்ளடக்கிய நிர்குண கலசமாக கருதப்படுகிறது. மூதாதையர்களுக்காக இந்த நீர்க்கலசத்தை தானம் செய்யும்போது நம் ஆசைகள் அழிகின்றன. அதோடு இந்த செயல் மூலம் கிடைக்கும் இறைவனின் அருள் நம் கர்மாக்களால் ஏற்பட்ட பாவத்தை போக்குகின்றது. நம் கர்மாக்களால் ஏற்படும் சூட்சும ஆசைகள் இந்த தானத்தின் மூலம் இறைவனின் திருப்பாதங்களில் சமர்ப்பிக்கப்படுகின்றன. நீர்க்கலசத்தை தானம் செய்வதன் அர்த்தம் கலசத்திலுள்ள நீர் பவித்ரமாக கருதப்படுவதால் அது நம் உடல் சம்பந்தமான ஆசைகளை நம் கர்மாக்களை அந்த கலசத்தில் கரைத்து விடுகிறது. அதன் மூலம் ஆசைகள் அழிக்கப் படுவதால் கர்மாக்களை எதிர்பார்ப்பின்றி செய்ய






முடிகிறது. அதோடு எல்லா ஆசைகளும் இந்த நீர்க்கலசத்தின் வாயிலாக தெய்வங்கள் மற்றும் பித்ருக்களின் பிரதிநிதியாக உள்ள பிராம்மணரின் காலடியில் சமர்ப்பிக்கப்படுகிறது.

## தானம் அளிப்பதன் வழிமுறை

தெய்வத்திற்கென்று வைக்கப்பட்ட கலசத்தில் வசந்தமாதவ் என்ற பெயரில் ஸ்ரீவிஷ்ணு ஆவாஹனம் செய்யப்பட்டு அதற்கு பூஜை செய்யப்படுகிறது. அதேபோல் மூதாதையர்களுக்காக வைக்கப்பட்ட கலசத்தில் அனைத்து மூதாதையர்களும் ஆவாஹனம் செய்யப்பட்டு அதற்கும் பூஜை செய்யப்படுகிறது.

## செய்ய வேண்டிய மற்ற சடங்குகள்

இந்த சுபதினத்தில் விதைகள் விதைக்கப்படுகின்றன. பூமிபூஜை செய்யப்பட்டு மரங்கள் நடப்படுகின்றன. சில இடங்களில் மக்களுக்கு குடிதண்ணீர் வழங்கப்படுகிறது.

## கொண்டாட வேண்டிய வழிமுறை

பொதுமுடக்க சமயத்தில் நம்மால் வீட்டை விட்டு வெளியேற முடிவதில்லை. இத்தகைய நிலையில் ஆபத்தர்மத்தில் கூறியுள்ள சில மாற்று ஏற்பாடுகளை இங்கு தருகிறோம்

1. பவித்ர ஸ்நானம் குளிக்கும்போது கங்கா மாதாவிடம் பிரார்த்தனை செய்வதன் மூலம் புனித கங்கையில் குளித்த புண்ணிய பலன் கிடைக்கிறது. அதற்கு குளிக்கும் முன்பு இந்த ஸ்லோகத்தை சொல்லவும்

கங்கே ச யமுனே சைவ கோதாவரி ஸரஸ்வதி |
நர்மதே சிந்து காவேரி ஜலேஸ்மின் ஸந்நிதிம் குரு ||

## அர்த்தம்:

ஹே புனித நதிகளான கங்கா, யமுனா, கோதாவரி, ஸரஸ்வதி, நர்மதா, சிந்து மற்றும் காவேரி, தயைகூர்ந்து இந்த தண்ணீரில் எழுந்தருளுங்கள்.

2. ஸத்பாத்ர தானம் இன்று பல ஸ்தாபனங்கள் ஆன்லைன் மூலமாக நன்கொடை பெறுகின்றன. இந்த வசதியை பயன்படுத்தி நீங்களும் ஆன்மீகத்தைப் பரப்பும் மகான்கள் மற்றும் ஸ்தாபனங்களுக்கு நன்கொடை அளிக்கலாம். இதற்கு வீட்டின் படியைக் கூட தாண்டத் தேவையில்லை.

3. நீர் நிரம்பிய கும்பத்தின் தானம் அக்ஷய த்ரிதீயை அன்று நீர் நிரம்பிய கும்பத்தை தானமாக அளிக்க வேண்டும் என்று சாஸ் திரங்கள் கூறுகின்றன. தற்போது வெளியே போக முடியாத நிலையில் அதற்கான சங்கல்பத்தை மேற்கொள்ளலாம். பிறகு, பயண கட்டுப்பாடுகள் தளர்ந்த பின்பு, வெளியே செல்வது பாதுகாப்பானது என்று அரசு அறிவித்த பிறகு நிஜமான தானத்தை செய்யலாம்.

4. பித்ரு தர்ப்பணம் இது இறந்த மூதாதையர்களுக்காக செய்யப்படும் அர்ப்பணம். மூதாதையர்களிடம் பிரார்த்தனை செய்து இந்த தர்ப்பணத்தை வீட்டிலேயே செய்யலாம்.

5. குலாசாரப்படி செய்ய வேண்டிய சில சடங்குகள் உங்கள் குல வழக்கப்படி சில சடங்குகளை செய்யும்போது அது அரசு விதிகளை மீறாமல் உள்ளனவா என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும்.

– தகவல்: ஸனாதனின் கையேடு மற்றும்
www.spiritualresearchfoundation.org
தொடர்பு: 09380949626

# ஆன்மீக வழியில் அமைதி

17

நமது எண்ணங்களின் மூலம் நாம் கட்டளையிடும் பணிகளை பிரபஞ்சத்துடன் கலந்து நிறைவேற்றும் தன்மையுடையது நமது ஆழ்மனம் ஆகும். நாம் எண்ணும் எண்ணங்களை ஆழ்மனதில் பதிய வைத்து விட்டால், உரிய காலத்தில் ஆழ்மனம் அதனை வெளிபடுத்தி பிரபஞ்ச சக்தியுடன் கலந்து நன்கு செயல்படுத்தும் தன்மை உடையது. எனவே நமது ஆழ்மனதில் நேர்மறை எண்ணங்களை பதிவு செய்து கொள்வதற்கு ஆன்மீக வழியில் பயிற்சியை மேற்கொள்ள வேண்டும். நமது நேர்மறை எண்ணங்கள்தான் நமக்கு இன்பத்தை மகிழ்ச்சியை மற்றும் மன அமைதியைத் தரக்கூடியது. ஆழ்மனதில் பதியும் எதிர்மறை எண்ணங்கள் கோபம், பொறாமை போன்ற தீய குணங்களை வெளிபடுத்தி மனிதனை துன்பத்தில் மூழ்க செய்து விடும். நமது ஆழ்மனதில் பதியும் நேர்மறை எண்ணங்கள் அன்பு, பண்பு, மனிதநேயம் போன்ற நற்பண்புகளை வெளிபடுத்தி இன்பத்தில் மூழ்கச் செய்வதோடு வாழ்வில் நாம் விரும்பும் தேடும் மனஅமைதியையும் கொடுக்கும். நேர்மறை எண்ணங்களை நமது ஆழ்மனதில் பதிய வைப்பதற்கு ஆன்மீக வழி நமக்கு பெரிதும் துணை புரியும். நன்கு வழி காட்டும்.

உலகில் வாழும் மனிதர்கள் அனைவரும் நிறைந்த ஆனந்தம், மகிழ்ச்சி சுகத்தைத்தான் தங்கள் வாழ்க்கையில் பெறவேண்டும் என்று விரும்புகிறார்கள். குறைவில்லாத நிறைவான ஆனந்தம் மகிழ்ச்சி சுகம் என்றால் என்ன என்று சிந்தித்துப் பார்த்தால், பூர்ண ஆனந்தம் என்பது மோட்சம் என்று சாஸ்திரங்கள், வேதங்கள் இதிகாசங்கள் சுட்டிக்காட்டுகிறது. மனிதர்கள் தர்ம நியதிப்படி செய்யக்கூடிய செயல்கள்தான் புண்ணியத்தின் பலன்களைக் கொடுக்கும். அதேபோல் அதர்மப்படி செய்யக்கூடிய செயல்கள் அனைத்தும் மனிதனுக்கு பாவப்பலன்களைக் கொடுக்கும். உலகில் எவையெல்லாம் தர்மம், அதர்மம் என்று சாஸ்திரங்கள், வேதங்கள், இதிகாசங்கள், கதைகள், பாடல்கள் மூலம் கூறுகிறது.

நாம் அறம், பொருள், இன்பம் இவற்றின் மூலமாக ஆனந்தத்தினை மகிழ்ச்சியை அடைகிறோம். நாம் தர்ம நியதிப்படி தானதர்மங்கள் செய்து எவ்வளவு புண்ணியத்தை நம் வாழ்வில் சேர்த்துக் கொள்கிறமோ, அந்தளவுக்கு ஆனந்தம் மகிழ்ச்சி சுகம் நமது வாழ்வில் கிடைக்கிறது. நாம் செய்த புண்ணியத்தின் பலன்களை நாம் மகிழ்ச்சியாக சுகமான வாழ்வாக அனுபவிக்கிறோம். நாம் செய்த புண்ணியத்தின் பலன்கள் தீர்ந்தவுடன் மனஅமைதியை இழக்கிறோம். அதனால் நாம் துன்பம் துயரங்களை அனுபவவிக்கிறோம். நாம் துன்பங்கள் துயரங்களை தாங்கிக்கொள்ள முடியாதபோது மீண்டும் புண்ணியத்தைத் தேடும் தானதர்ம செயல்களில் ஈடுபடுகிறோம். நாம் செய்த புண்ணியத்தின் பலன்கள் தீர்ந்து விட்டது என்பதை நமது உடலும் உள்ளமும் துன்பப்படும்போது கோடிட்டு உணர்த்தி விடும். எனவே நாம் எந்தவித பலனையும் எதிர்பாராமல் முடிந்தபோதெல்லாம், முடிந்தளவுக்கு தானதர்மங்களை செய்து கொண்டே இருக்க வேண்டும். அப்போது நமக்கு இழந்த ஆனந்தம் மகிழ்ச்சி எல்லாம் குறையாமல் தொடர்ந்து கிடைத்துக்கொண்டே இருக்கும். அதன் மூலம் நாம் விரும்பும் மன அமைதியை பெறலாம்.



பொதுவாக ஆனந்தம் மகிழ்ச்சி, சுகமான வாழ்க்கை நமக்குத் திடீரென்று கிடைத்து விடாது.

சுகமானவாழ்வு வேண்டும் என்றால்புண் ணியச்செயல்களை தர்மநியதிப்படி விருப்பமுடன் நேர்மையுடன் முழுமையான ஈடுபாட்டுடன் செய்ய வேண்டும். புண்ணியமும் திடீரென்று வந்து விடாது எந்தச் செயல்கள் செய்தால் புண்ணியத்தின் பலன்கள் நமது

வாழ்வில் கிடைக்கும். எந்தச் செயல்கள் செய்தால் பாவத்தின் பலன்கள் அனுபவிக்க வேண்டும் என்ற அறிவினை நமக்கு வேதங்கள் இதிகாசங்கள் சாஸ்திரங்கள் ஆன்மீக நூல்கள் விளக்கிக் கூறுகிறது. நாம் புண்ணியப்பலன்கள் தரக்கூடிய தானதர்மங்கள் செய்யும்போது வாழ்வில் ஆனந்தம் மகிழ்ச்சியை பெற முடியும். நாம் விரும்பிச் செய்யக்கூடிய தானதர்மத்தினால் வரக்கூடிய புண்ணியப்பலன்களும் நிரந்தரமானதல்ல என்பதையும் நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.



எழுத்தாளர்
பூ.சுப்ரமணியன்

உயிர் ஏன் அவன் உடலை விட்டு பிரிவதற்கு மறுக்கிறது என்பதை அப்போது கிருஷ்ண பராமாத்மா அறிந்துகொள்கிறான்.

எனவே கிருஷ்ணபகவான் போர்க்களத்தில் ஒரு முதிய யாசகன்போல் கர்ணன் முன் வந்து, அவன் சேர்த்து வைத்திருந்த புண்ணியத்தின் பலன்களை எல்லாம் தந்திரமாக யாசகமாக போர்க்களத்தில் பெற்று விடுகிறான். அதனால் கர்ணனிடமிருந்த புண்ணியப்பலன்களும் அவனை விட்டுப் பிரிந்தது. அதன்பின்தான்

மகாபாரதப் போர்க்களத்தில் ஒரு காட்சி. கர்ணன் நண்பன் துரியோதனனுக்காக செஞ் சோற்றுக்கடன் தீர்ப்பதற்கு போர்க்களத்தில் அர்ச்சுனன் அம்புபட்டு, போர்க்களத்தில் வீழ்ந்து வேதனையுடன் தேர்ச்சக்கரத்தின் மீது கர்ணன் சாய்ந்திருக்கிறான். அவன் உயிர் உடலை விட்டு பிரியாமல் போர்க்களத்தில் துடித்துக்கொண்டிருக்கிறது. மேலும் அர்ச்சுனன் அவன் மீது எய்யக்கூடிய அம்புகள் எல்லாம் கர்ணன் கழுத்தில் மாலைகளாக வந்து விழுகின்றன. அவன் செய்த தானதர்மங்கள் அப்போது தர்மதேவதையாக வந்து, அவன் உயிர் உடலை விட்டு பிரியாதபடி காத்து நிற்கிறாள். போர்க்களத்தில் அர்ச்சுனனின் பல அம்புகள் உடல் மீது தைத்தும் கர்ணன்

கர்ணனின் உயிர் அவன் உடலை விட்டுப் பிரிந்து சென்றது. எனவே புண்ணியத்தின் பலன்களும் நிரந்தரமானது அல்ல என்பதை மகாபாரதம் என்னும் இதிகாசத்தில் வரும் கர்ணன் கதை மூலம் நாம் அறிந்து கொள்ளலாம். அவன் எந்தவிதமான பிரதிபலன்களையும் எதிர்நோக்காமல் கிருஷ்ணபகவானுக்கு தன்னோட புண்ணியத்தை எல்லாம் கர்ணன் யாசகமாக அளித்தான். அதனால் அவன் மோட்சம் என்னும் வீடு பேற்றினை கிருஷ்ணபகவானால் அடைந்தான் என்பதை மகாபாரதம் என்னும் இதிகாசம் நமக்கு எடுத்துக்காட்டும் நியதியாகும்.

ஆன்மீக நூல்களை நாம் ஏன் படிக்கவேண்டும். அதனால் நமக்கு என்ன பயன்கள் ஏற்படும் என்று சிந்தித்து பாருங்கள்.



நாம் மற்ற நூல்களை படிப்பதைவிட ஆன்மீக சம்பந்தப்பட்ட நூல்களை படிக்கும்போது மனதிற்கு ஒரு இனம்புரியாத தற்காலிகமான மகிழ்ச்சியும் மன ஆறுதலும் கிடைப்பதை உணர்வதற்கு முடியும் ஆன்மீக நூல்கள் நமது நற்செயல்களுக்கு ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்கிறது. ஆன்மீக நூல்களைப் படிப்பதால் நமது வாழ்க்கை முறையானது மாறி விடுமா என்று சிலர் கேட்கலாம். மகாத்மாகாந்தி அரிச்சந்திரன் வரலாற்றை நாடகத்தின் மூலம் அறிந்ததால் சத்தியத்தினை தனது வாழ்வில் கடைபிடிக்க வேண்டும் என்ற எண்ணம் .'தன்னையும் அறியாமல் உதயமானது' என்று சத்தியசோதனை என்னும் நூலில் கூறியுள்ளார். அரிச்சந்திரன் வரலாறு காந்தியின் வாழ்க்கைப்

பாதையை மாற்றி அமைத்தது. இதனை நாம் உணர்ந்து கொண்டால் ஆன்மீக நூல்களை ஆழ்ந்து படிப்பதால் நமது வாழ்க்கைமுறை மாறுவதற்கு வாய்ப்பு உள்ளது என்பதை அறிந்து கொள்ளலாம்.

மோட்சம் என்றால் மனிதவாழ்வில் மனநிறைவு, பூர்ண திருப்தி என்று பொருள்படும். நான் மனநிறைவாக இருக்கிறேன் என்று கூறுபவரிடம் மீண்டும் மீண்டும் பலதடவை உங்கள் மனது அமைதிநிறைந்துள்ளதா என்று கேட்டுப்பாருங்கள் உடனே அவருக்குக் கோபம் வந்து விடும். மனநிறைவு பெற்றவருக்கு எப்படி கோபம் வரும் என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். நமது மனம் ஒரு பொருளின் மீது ஆசைப்படுகிறது. அந்தப்பொருள் நாம் விரும்பியபடி கிடைத்துவிட்டால் நமது மனம் நிறைவடைவதில்லை. மனித மனங்கள் எதிலும் திருப்தி அடைவதில்லை. நமது மனம் நிறைவு அடைந்ததுபோல் சில நேரங்களில் தோன்றும் ஆனால் மனித மனம் நிறைவு அடைவதில்லை.

மனம் ஒரு பொருளை அடைந்தவுடன் அதன் மூலம் மகிழ்ச்சியை உணர்ந்து கொள்கிறது. ஆனால் மனம் வேறு ஒரு பொருளைப் பார்த்தவுடன் அதனையும் அடைந்து அதன் மூலம் மகிழ்ச்சி கொள்ள வேண்டும் என்று நினைக்கிறது. திருநெல்வேலி அல்வா சுவை மிக்கதுதான் என்று அனைவருக்கும் தெரியும். அந்த அல்வா சுவையை நாம் எதுவரைக்கும் சுவைத்து இன்பம் காணலாம் என்றால் நமது நாக்கில் இருக்கும்வரையில்தான் சுவையை உணர முடியும். அது நமது தொண்டைக்குள் இறங்கி விட்டால், அதன்பிறகு அல்வாவின் சுவையை உணர முடியுமா ? அதேபோல்தான் நாம் எந்தப் பொருளை அடைந்தாலும் நமது மனம் சிறிது நேரம்தான் மன நிறைவு கொள்கிறது. மீண்டும் மனதில் ஒரு வெற்றிடம். அது நிறைந்தவுடன் சிறிது காலம் மகிழ்ச்சி மீண்டும் ஒரு தேடல் இப்படி மனமானது ஆசையில் நிறைந்து, நிறைந்து மகிழ்ந்து ஏதோவொரு காரணத்தினால் மனம் வெற்றிடமாகிக்கொண்டே இருக்கிறது.

எடுத்தக்காட்டாக ஒருவர் ஆரம்பத்தில் இருசக்கர வாகனம் வாங்கினால் நினைத்த நேரத்திற்கு நினைத்த இடத்திற்கு சொகுசாக சென்று வரலாம் என்று அவருடைய மனம் நினைக்கிறது. இருசக்கர வாகனம் வாங்கி விட்டால் மகிழ்ச்சியாக மனநிறைவுடன் இருக்கலாம் என்று அவர் நினைக்கிறார். அவர் முயற்சி செய்து வங்கியில் கடன் வாங்கி அவர் நினைத்தபடி இருசக்கர வாகனமும் வாங்கி விட்டார். அவர் தான் நினைத்தபடி இருசக்கர வாகனம் வாங்கி

• ஆன்மிகம் • தத்துவம் • உடல்நலம் • பலன்கள்
புத்தம் புதிய ஆன்மீக செய்திகளை தினமும் படியுங்கள்
www.aanmeegamalar.com
ஆன்மிகமலர்.காம்

விட்டதால் மனதில் ஓரளவு மகிழ்ச்சியும் அடைகிறார். அந்த மகிழ்ச்சி ஆனந்தம் அவருக்குச் சிறிது காலம்தான் நீடிக்கிறது. அவர் மனம் அதனால் மனநிறைவு அடைந்து விடுவதில்லை. அவர் மனம் சொகுசாகப் பயணம் செய்வதற்கு ஒரு கார் இருந்தால் மகிழ்ச்சியாக இருக்கலாம் என்று அவர் மனம் இப்போது சொகுசுக்காருக்குத் தாவியது. இதுபோல் மனிதமனம் ஒவ்வொரு பொருளையும் அடைந்தவுடன் திருப்தி அடையாமல் உலகில் உள்ள ஏதாவது ஒரு பொருளை அந்தப் பொருளினால் வரக்கூடிய ஆனந்தத்தை சுகத்தை மனம் நாடிச்சென்று கொண்டேயிருக்கிறது.

ஒரு குழந்தை தன்னோட தாயைக் காணாமல் இடைவிடாமல் அழுதுகொண்டு இருக்கிறது. அக்குழந்தையின் அழுகையை நிறுத்துவதற்கு ஒரு பொம்மையை வாங்கிக் கொடுத்தால் அக்குழந்தை அழுகையை நிறுத்தி விட்டு, அந்த பொம்மையுடன் விளையாட ஆரம்பித்து விடுகிறது. மீண்டும் தன்னோட தாயின் நினைவு வந்தவுடன் விளையாடிக் கொண்டிருந்த பொம்மையைத் தூக்கி எறிந்து விட்டு தன்னோட அழுகையை



தொடர ஆரம்பித்து விடுகிறது. இதேபோல்தான் மனிதர்கள் மனஅமைதிக்கு மகிழ்ச்சிக்கு ஆனந்தம் அடைவதற்கு ஒவ்வொரு பொருளையும் நாடி எதிலும் நித்தியமான மகிழ்ச்சியையோ ஆனந்தத்தையோ அமைதியோ கிடைக்காமல் மனம் குழம்பித் திரிந்து கொண்டிருக்கிறார்கள்.

இந்த மனித மனம் ஆன்மீக வழியில் செல்லும்போது மன நிறைவு அடைந்து விடுகிறது. மனிதனுடைய மன நிறைவுக்குதான் மோட்சம் என்று கூறலாம். நமது ஆழ்மனதில் ஏற்படக்கூடிய மனநிறைவுதான் மோட்சம் ஆகும். மனிதர்களிடம் உள்ள மனம் மேலோட்டமான மனம், உள்மனம் மற்றும் ஆழ்மனம் என்று மூன்று பிரிவுகளாக இருக்கின்றது. மனிதனுடைய ஆழ்மனதுக்கு உண்டாகும் மன நிறைவுதான் மோட்சம் எனப்படும். அவனுடைய ஆழ்ந்த மனதில் ஏற்படக்கூடிய அமைதிதான் மோட்சம் என்று ஆன்மிகம் கூறுகிறது.

நாம் எந்தச் செயல்கள் செய்தால் எப்படிப்பட்ட புண்ணியப்பலன்கள் கிடைக்கும் என்பதையும், எந்தச் செயல்கள் செய்தால் எப்படிப்பட்ட செயல்களில் ஈடுபட்டால் பாவங்கள் நம்மிடம் வந்து சேரும் என்பதை புராணங்கள் இதிகாசங்கள் வேதங்கள் எல்லாம் நமக்கு எடுத்துக் கூறுகிறது. உலகில் நாம் ஆன்மீக வழியில் செல்லும்போது நாம் அடையும் துயரங்கள் துன்பங்கள் ஆகியவற்றினை பற்றி அறிந்து கொள்ளலாம். அதாவது தீதும் நன்றும் பிறர்தர வாரா என்பதை நாம் உணர்ந்து கொள்ளலாம் இத்தகையதொரு ஞானஅறிவைப் பெறுவதற்கு ஆன்மிகம் வழி காட்டுகிறது. நமக்கு நித்தியமான ஆனந்தம் மகிழ்ச்சி சுகமான வாழ்வு எது என்று அறியாமையினால்தான் வாழ்வில் நித்தியமான உண்மையான ஆனந்தத்தினை நம்மையும் அறியாமல் நாம் இழந்து கொண்டிருக்கிறோம். ஆன்மீக வழியின் மூலம் பயிற்சி பெற்று நமது ஆழ்மனதில் எதிர்மறை எண்ணங்களை புகுவதற்கு சிறிதும் இடம் கொடுக்காமல், நேர்மறை எண்ணங்களை நமது மனதில் வளர்த்துக்கொள்ள வேண்டும். நமது மனதில் நேர்மறை எண்ணங்கள் நிறையும்போதுதான் நாம் தேடும் விரும்பும் மன அமைதி கிடைக்கும்.

(அமைதி தொடரும்)

**எழுத்தாளர் பூ.சுப்ரமணியன்**
Tahsildar (Retd) கைபேசி: 9894043308

**Owned, Published by C.N.RAJA. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.**
**Editor : C.N.Raja, Cell: 9444228203.**
Website: www.aanmeegamalar.com / app: aanmeegamalar / E-mail: aanmeegamalar@gmail.com




#LargestVaccineDrive

## நீங்கள் 18 வயது நிரம்பியவரா ?

**கோ-வின் இணையதளத்தில் ஏப்ரல் 28, 2021 முதல் முன்பதிவு செய்து கோவிட்-19 தடுப்பூசியை பெறுவது எப்படி ?**

வயது 18+

1. கோ-வின் இணையதளத்தில் உள் நுழையவும்
   - cowin.gov.in
2. தடுப்பூசி பெறுவதற்கான தேதி மற்றும் தனியார் தடுப்பூசி மையத்தை தேர்ந்தெடுக்கவும்.
3. 18 முதல் 45 வயதுடையோர் தங்களுக்கான தடுப்பூசியை தனியார் தடுப்பூசி மையங்களில் மட்டுமே பெற்றுக் கொள்ள முடியும்.
4. பதிவு செய்வதற்கு பயன்படுத்திய அலைபேசி எண்ணிற்கு உங்களுக்கான பதிவு உறுதி செய்யப்பட்டது என்ற செய்தி அனுப்பப்படும்.
5. முன்பதிவுச் சீட்டு மற்றும் பதிவு செய்ய பயன்படுத்திய உங்களது புகைப்படத்துடன்கூடிய அடையாள அட்டையை மறவாமல் தடுப்பூசி மையத்திற்கு எடுத்துச் செல்லுங்கள்.

தனிநபர் பாதுகாப்பே தேசத்தின் பாதுகாப்பு!

www.stopcorona.tn.gov.in | @tndphpm | @tndphpm | @tndphpm

aanmeegamalar.com